# பஞ்சாகமங்கள்

**பாடம் ௯**

முற்பிதாவான யாக்கோபு

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை** ...... 1

**அமைப்பு மற்றும் உள்ளடக்கம்** ...... 2

**போராட்டத்தின் துவக்கம் (ஆதியாகமம் 25:19-34)** ...... 6

**போராட்டத்தின் முடிவு (ஆதியாகமம் 35:16-37:1)** ...... 8

**ஈசாக்கும் பெலிஸ்தியரும் (ஆதியாகமம் 26:1-33)** ...... 9

**யாக்கோபும் கானானியரும் (ஆதியாகமம் 33:18-35:15)** ...... 10

**பகையுடனான பிரிவு (26:34-28:22)** ...... 12

**சமாதானமான பிரிவு (ஆதியாகமம் 32:1-33:17)** ...... 12

**லாபானுடனான காலம் (ஆதியாகமம் 29:1-31:55)** ...... 13

**முக்கிய கருப்பொருள்கள்** ...... 15

**இஸ்ரவேலின் மீதான தேவகிருபை** ...... 16

ஆதி அர்த்தம் ...... 16

நவீன காலப் பிரயோகம் ...... 20

**தேவன் மீது இஸ்ரவேலர் கொண்டிருக்க வேண்டிய பற்று** ...... 21

ஆதி அர்த்தம் ...... 22

நவீன காலப் பிரயோகம் ...... 25

**இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதம்** ...... 27

ஆதி அர்த்தம் ...... 27

நவீன காலப் பிரயோகம் ...... 28

**இஸ்ரவேல் மூலமாக தேவனின் ஆசீர்வாதம்** ...... 29

ஆதி அர்த்தம் ...... 30

நவீன காலப் பிரயோகம் ...... 33

**முடிவுரை** ...... 34




வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

நம்பிக்கைக்கு அப்பாற்பட்டவர்களாகத் தோன்றும் அளவிற்கு வஞ்சகர்களாக இருப்பவர்களை எப்போதாவது நீங்கள் பார்த்ததுண்டா? அவர்களுடைய வஞ்சகமும், நேர்மையின்மையும் – சில காலத்திற்காவது – அவர்களுக்கு ஆதாயமாக இருக்கலாம் என்றாலும், பெரும்பாலும் அவர்களை அதிக மோசமானவர்களாகவே மாற்றுகின்றன. ஆனால், அப்படிப்பட்டவர்களையும் தேவன் விசேஷித்த விதங்களில் பயன்படுத்த விரும்புகிறார் என்பது சந்தோஷமான விஷயம். அவர் தொட முடியாத தூரத்தில் அவர்கள் இல்லையே. அவர்களைச் சிறுமைப்படுத்தி, தம்மைச் சேவிக்க ஆயத்தப்படுபவர்களாக உருவாக்கும்படி தேவன் அவர்கள் வாழ்வில் கஷ்டங்களை அனுமதிப்பார். இவ்விதமாக தேவனால் சந்திக்கப்படுகிறவர்கள் இறுதியில் பெரும்பாலும் தாழ்மை மற்றும் விசுவாசத்திற்கு முன்மாதிரிகளாக மாறுவார்கள்.

இப்பாடம் வேதாகமத்தில் மிக வஞ்சகமான மனிதர்களில் ஒருவரான "முற்பிதாவாகிய யாக்கோபை" பற்றிய *பஞ்சாகம* பகுதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 25:19-37:1 இல் உள்ள இப்பகுதி யாக்கோபு எந்த அளவிற்கு வஞ்சகனாக இருந்தார் என்பதை மட்டுமல்ல, தேவன் எப்படி அவரைச் சிறுமைப்படுத்தி, இஸ்ரவேலின் முற்பிதாக்களில் மிகவும் விரும்பப்படும் ஒருவராக உருவாக்கினார் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

ஆதியாகம புத்தகத்தை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்று முந்தைய பாடங்களில் பார்த்தோம். 1:1–11:9 வசனங்களைக் கொண்ட முதல் பகுதி ஆதி கால வரலாறு பற்றியது. இங்கு, இஸ்ரவேலர் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைக்கப்பட்டது உலக சரித்திரத்தின் ஆரம்ப நிலைகளின் நடந்த சம்பவங்களின்போது தொடங்கியது என்று மோசே விளக்கியுள்ளார். 11:10–37:1 வசனங்களைக் கொண்ட இரண்டாம் பகுதி ஆதி முற்பிதாக்களின் சரித்திரத்தை விளக்குகிறது. இந்தப் பிரிவில், வாக்குத்தத்த தேசத்திற்கான பிரயாணத்தை எப்படி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரின் வாழ்க்கையை பின்னணியாகக் கொண்டு பார்க்க வேண்டும் என்று மோசே தெளிவுபடுத்துகிறார். 37:2–50:26 வசனங்களைக் கொண்ட மூன்றாம் பிரிவு பிற்கால முற்பிதாக்களின் சரித்திரத்தைப் பற்றியது. இந்த வசனங்களில் மோசே, இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்தை நோக்கி பிரயாணப்பட்டபோது, அவர்களின் கோத்திரங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனைகளைக் கையாளும் விதத்தில் யோசேப்பையும் அவருடைய சகோதரர்களையும் பற்றிய கதையைச் சொல்கிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முற்பிதாவாகிய யாக்கோபைப் பற்றிய பதிவு இரண்டாம் பிரிவில் அமைந்துள்ளது: இப்பிரிவில், நன்கு அறியப்பட்ட இஸ்ரவேலின் மூன்று முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களைப் பற்றிய ஆதி முற்பிதாக்களின் சரித்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஈசாக்கின் வாழ்க்கைச் சம்பவங்கள் 11:10-25:18 வசனங்களில் உள்ள ஆபிரகாமைப் பற்றிய பதிவிலும், 25:19–37:1 வசனங்களில் உள்ள யாக்கோபைப் பற்றிய பதிவிலும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்தப் பாடத்தில், யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றிய இப்பிரிவின் இரண்டாம் பாகத்தில் கவனம் செலுத்துவோம்.

முற்பிதாவாகிய யாக்கோபைப் பற்றிய நம் பாடம் இரண்டு முக்கிய பாகங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளது. முதல் பாகத்தில், ஆதியாகமப் புத்தகத்தினுடைய இப்பகுதியின் அமைப்பையும், பொருளடக்கத்தையும் ஆய்வு செய்வோம். அதன் பின்னர், மோசே ஆதி வாசகர்களுக்கு வலியுறுத்திய முக்கிய கருப்பொருள்களையும், இக்கருப்பொருள்கள் எவ்வாறு நவீன கிறிஸ்தவர்களுக்குப் பொருந்துகின்றன என்பதையும் பார்க்க இருக்கிறோம். யாக்கோபுடைய கதையின் அமைப்பு மற்றும் பொருளடக்கத்திலிருந்து தொடங்குவோம்.

# அமைப்பு மற்றும் உள்ளடக்கம்

பெரும்பாலான வேதபாட மாணவர்களுக்கு யாக்கோபின் வாழ்க்கைச் சம்பவங்கள் பரிச்சயமானதாக இருக்கும். ஆனால், நம் பாடத்தின் இந்தப் பகுதியில், மோசே எவ்வாறு இச்சம்பவங்களை ஆதியாகம புத்தகத்தில் அமைத்திருக்கிறார் என்று பார்க்கவிருக்கிறோம். வேதவசனங்களை வாசிக்கும்போது, அவை என்ன சொல்கின்றன என்றும், அதை எப்படிச் சொல்கின்றன என்றும் கேட்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதாவது, ஒவ்வொரு பத்தியின் அமைப்பும், பொருளடக்கமும் எவ்வாறு இணைந்து செயல்படுகின்றன? என்று பார்க்க வேண்டும். இந்தத் தொடர்பை விளங்கிக் கொள்வதன் மூலம் வேதாகமத்தின் புத்தகங்களை எழுதியவர்கள் தங்கள் ஆதி வாசகர்களுக்காக கொண்டிருந்த நோக்கங்களை அறியலாம். மற்றும், அவர்கள் எழுதிய வேத பகுதிகளை நம்முடைய நவீன உலகத்தில் எப்படிப் பிரயோகிப்பது என்றும் அறிந்து கொள்ளலாம்.

ஆதியாகமம் 25:19-37:1 போன்ற நீளமான மற்றும் கடினமான ஒரு வேத பகுதிக்கு திட்டவரை உருவாக்க பல வழிகள் உண்டு. இருப்பினும், நம்முடைய நோக்கங்களுக்கு ஏற்ப யாக்கோபின் வாழ்க்கைப் பதிவை ஏழு முக்கிய பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முதல் பிரிவான ஆதியாகமம் 25:19-34 யை போராட்டத்தின் ஆரம்பம் என்று அழைக்கலாம். அது, யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் இடையிலான போராட்டம் மட்டுமல்ல, அவர்களிலிருந்து தோன்றிய ஜாதிகளுக்கு இடையேயான போராட்டம் என்னும் தத்ரூபமான ஒரு பிரச்சனையை எழுப்புகின்றது. இந்தப் போராட்டம் யாக்கோபின் வாழ்க்கைப் பதிவு முழுவதும் தீவிரமாக எழுவதும், அடங்குவதுமாக உள்ளது. இந்த முதல் பிரிவின் முடிவில், கதை யாக்கோபு மற்றும் ஏசாவிடமிருந்து, அவர்களுடைய தகப்பனாகிய ஈசாக்கின் பக்கம் திரும்பி, அவரைக் கதாநாயகனாகக் கொண்டு நிறைவடைகிறது.

இரண்டாம் பிரிவான 26:1-33 வசனங்கள், ஈசாக்குக்கும் பெலிஸ்தியருக்கும் இடையிலான அமைதியான சந்திப்புகளாக மாறுகிறது. இப்பிரிவின் நிறைவில், கதை மீண்டும் ஏசா மற்றும் யாக்கோபின் பக்கம் திரும்பி, அவர்களை முக்கிய கதாபாத்திரங்களாகக் கொண்டு நிறைவடைகிறது.

மூன்றாம் பிரிவான 26:34-28:22 வசனங்கள் யாக்கோபும், ஏசாவும் வெறுப்புடன் பிரிவதைப் பற்றிக் கூறுகின்றன. யாக்கோபு வாக்குத்தத்த தேசத்திற்கு வெளியில் வசித்த லாபான் மற்றும் அவருடைய உறவினர்களிடம் செல்வதுடன் இந்தப் பிரிவு நிறைவடைகிறது.

நான்காம் பிரிவு, 29:1-31:55 வசனங்களில் யாக்கோபு லாபானுடன் இருந்த காலத்தை விவரிக்கிறது. யாக்கோபு வாக்குத்தத்த தேசத்திற்குத் திரும்பும் நிகழ்வுடன் இப்பிரிவு நிறைவடைகிறது.

32:1-33:17 இல் உள்ள ஐந்தாம் பிரிவு யாக்கோபு வாக்குத்தத்த தேசத்திற்குத் திரும்பிய பின்னர், யாக்கோபும் ஏசாவும் சமாதானமாக பிரிந்து போவதைப் பற்றிச் சொல்கிறது. பின்னர் இப்பிரிவு ஏசாவிடமிருந்து யாக்கோபிடம் திரும்பி, அவர் கானானிய எதிரிகளைக் கையாண்டதைப் பற்றிச் சொல்கிறது.

ஆறாம் பிரிவான 33:18-35:15 வசனங்கள் யாக்கோபுக்கும் கானானியருக்கும் இடையேயான சந்திப்புகளில் கவனம் செலுத்துகின்றது. இப்பிரிவின் முடிவில் யாக்கோபுடைய சந்ததியின் பக்கம் கவனம் திரும்புகிறது.

இறுதியாக, 35:16-37:1 வசனங்களிலுள்ள யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றிய ஏழாம் பிரிவு சகோதரர்களுடைய போராட்டத்தின் முடிவைப் பற்றிச் சொல்கிறது.

யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றிய இந்த அடிப்படைத் திட்டவரை பெரிய அளவிலான ஒரு முரண்தொடர் அணிநயத்தை அமைப்பதாக பல வர்ணனையாளர்கள் குறிப்பிடுகிறார்கள்:

> முரண்தொடர் அணிநயம் என்பது ஒரு மையப்பகுதிக்கு முன்னும் பின்னும் உள்ள பகுதிகள் ஒன்றுக்கொன்று இணையாக அல்லது சமநிலையில் இருக்கும் இலக்கிய அமைப்பு ஆகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரு பிரிவு அல்லது பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியின் திட்டவரையைப் பற்றிப் பேசும்போதெல்லாம், வெகுசிலர் தவிர வேதாகம புத்தகங்களை எழுதிய அனைவரும் ஒரு திட்டவரையை மனதில் வைக்காமல் தங்கள் கதைகளையோ அல்லது பாடல்கள் போன்றவற்றையோ எழுதவில்லை என்பதை மனதில் கொள்ளுங்கள். அதாவது, அவர்கள் “இப்போது நான் முதல் பகுதியில் இருக்கிறேன். இப்போது இரண்டாம் பகுதியில் இருக்கிறேன். இப்போது மூன்றாம் பகுதியில் இருக்கிறேன்” என்று குறிப்பிட்டிருப்பார்கள். இதற்கு மாறாக, எழுதப்பட்ட வேத பகுதிகளைப் பார்த்து, அடையாளம் காணக்கூடிய மாதிரி வடிவங்களைக் கண்டறிய மொழிப்பெயர்ப்பாளர்கள் நாடுவதைப் பற்றி இங்கு நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். எனவே, அமைப்பையும், அறிவுசார் தொடர்புகளையும் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் ஒவ்வொரு திட்டவரையும் குறிப்பிட்ட நிபந்தனையைப் பயன்படுத்துகின்றன என்று அறிகிறோம். நீங்கள் பயன்படுத்தும் நிபந்தனையைப் பொருத்து, வெவ்வேறு திட்டவரைகளை அமைப்பீர்கள். சமநிலை, அல்லது எதிரொலி, அல்லது பிரதிபலிப்பு, அல்லது முந்தின மற்றும் பிந்தின பிரிவுகளுக்கிடையேயான இணைகள் போன்ற நிபந்தனைகளில் ஒன்றைப் பயன்படுத்தலாம் … … ஆனால், – யாக்கோபைப் பற்றிய பதிவில் உள்ளது போல முதல் பிரிவிற்கும் கடைசிப் பிரிவிற்கும் இடையே - அதிக விவரமான இணைகளைக் கண்டறியும் பட்சத்தில், இப்படிப்பட்ட இணைகள் போதுமான அளவில் இருக்குமானால், அதனை “உள்நோக்க முரண்தொடர் அணிநயம்” என்று சொல்லும் நிலைக்கு வந்துவிடலாம். இதில், எழுதியவர் “நான் இதைச் செய்திருக்கிறேன். நான் இதைச் செய்திருக்கிறேன். நான் முதல் பாகத்தில் இதைச் செய்திருக்கிறேன். இப்போது, முந்தைய பகுதிகளுடன் உறுதியான ஒப்புமைகளைக் கொண்ட இவற்றைச் செய்யப் போகிறேன்” என்கிற விதமாக யோசிக்கிறார்… அவ்விதமான அமைப்பினால் உண்டாகும் ஒப்புமைகளின் மூலம் ஒத்த மற்றும் முரணான பிரிவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கும். யாக்கோபின் கதையைப் பொறுத்தவரை அது மிகுந்த பயனுள்ளது. யாக்கோபுடைய வாழ்க்கையின் ஆரம்பப் பகுதிகள் அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதிகளுடன் ஒத்திருக்கின்றன. முரண்பாடுகளையும், ஒப்பீடுகளையும் கொண்ட அந்த ஒப்புமைகளைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பார்க்கும்போது, அவையிரண்டும் இணைந்திருப்பதையும், பல்வேறு பகுதிகளுக்கிடையே தோன்றுவதைப் பார்க்கும்போது, ஒரு நூலாசிரியராக மோசே அவ்விரு பிரிவுகளிலும் எதை வலியுறுத்துகிறார் என்பதையும் காணும் வாய்ப்புக் கிடைக்கும். முரண்தொடர் அணிநயத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்வதற்கான முக்கியக் குறிப்பு ஒப்பீடுகளிலும், முரண்பாடுகளிலும்தான் உள்ளது.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

முன் குறிப்பிட்டது போல, யாக்கோபுடைய கதையின் முதல் பிரிவு சகோதரர்களான யாக்கோபிற்கும் ஏசாவுக்கும் இடையேயான போராட்டத்தை விவரிக்கிறது. இப்பிரிவு, அவர்களுடைய போராட்டத்தின் முடிவை விவரிக்கும் ஏழாம் மற்றும் இறுதிப் பிரிவுடன் சமநிலையில் உள்ளது. இவ்விரு பிரிவுகளும் சகோதரர்களுக்கு இடையேயான போராட்டத்தை மட்டுமல்ல, அவர்களிலிருந்து தோன்றிய ஜாதிகளுக்கு இடையேயான போராட்டத்தையும் குறிப்பிடுகின்றன.

இரண்டாம் பிரிவு ஈசாக்கு மற்றும் அவருக்கும் பெலிஸ்தியருக்கும் இருந்த தொடர்புகளில் கவனம் செலுத்துகிறது. இது, யாக்கோபு மற்றும் அவருக்கும் கானானியருக்கும் இருந்த தொடர்புகளைப் பற்றிய ஆறாம் பிரிவை ஒத்திருக்கிறது. இப்பிரிவுகள் ஒன்றுக்கொன்று சமநிலைப்படுத்துகின்றன, ஏனெனில் அவையிரண்டும் வாக்குத்தத்த தேசத்தில் முற்பிதாக்களுக்கும் மற்ற இனத்தினருக்கும் இடையே நிகழ்ந்த சந்திப்புகளை விவரிக்கின்றன. மூன்றாம் பிரிவு யாக்கோபும், ஏசாவும் வெறுப்புடன் பிரிந்ததைப் பதிவு செய்கிறது. இது, யாக்கோபும், ஏசாவும் சமாதானமாகப் பிரிந்து சென்றதைப் பற்றிய ஐந்தாம் பிரிவுடன் சமநிலையில் உள்ளது. இவ்விரு பிரிவுகளும் சகோதரர்கள் பிரிந்து சென்ற காலத்தின் சுற்றுச் சூழல் நிகழ்வுகளில் கவனம் செலுத்துகின்றன. இறுதியாக, நான்காம் பிரிவு யாக்கோபு லாபானுடன் தங்கியிருந்த காலத்தைப் பற்றிக் கூறுகிறது. இப்பிரிவு, முரண்தொடர் அணிநயத்தின் மையப்பகுதி அல்லது கீல்முனையாக தனித்து நிற்கிறது. இயல்பாகவே அது, யாக்கோபின் கதையில் ஒரு திருப்புமுனையை அமைக்கிறது.

இந்த நீண்ட வளைவு போன்ற இணை வடிவமைப்பை மனதில் கொண்டு, இணைப்பிரிவுகளை ஒப்பிட்டு, மோசேயுடைய பதிவின் பொருளடக்கத்தை ஆய்வு செய்வோம். அதற்கு வசதியாக, எல்லாவற்றிற்கும் வெளியே உள்ள பிரிவுகளில் தொடங்கி, மையப்பகுதிக்கு வருவோம். முதலில், ஆதியாகமம் 25:19-34 இல் உள்ள சகோதரர்களுடைய போராட்டத்தின் துவக்கத்தைப் பற்றிப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## போராட்டத்தின் துவக்கம் (ஆதியாகமம் 25:19-34)

இந்தப் பிரிவு, சகோதரர்களுக்கு இடையே எப்படி போராட்டம் தொடங்கியது என்பதைக் காண்பிக்கும் மூன்று சிறு பாகங்களைக் கொண்டது. முதலாம் பாகம் 25:19-23 இல் சகோதரர்கள் பிறப்பதற்கு முன்னர் நடக்கிறது. இரட்டையர்களான அவர்கள் தங்கள் தாயின் வயிற்றில் மோதிக் கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது. பிரசவத்திற்கு முந்தைய இப்போராட்டத்தைப் பற்றி தேவன் ரெபெக்காளுக்கு விளக்குவதை ஆதியாகமம் 25:23 இல் கவனியுங்கள்:

> இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது;
> இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும்,
> அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும்
> பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்
> (ஆதியாகமம் 25:23)

நாம் பார்ப்பது போல, யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் இடையேயான போராட்டம் தனிப்பட்ட விதத்தில் இரு சகோதரர்களுக்கு நடுவில் இருக்கும் போராட்டத்தை விட அதிகமானது என்று தேவன் கூறினார். அது, “இரண்டு தேசங்கள்” அல்லது “இரண்டு ஜாதிகளுக்கு” இடையேயான போராட்டமாக மாறவிருந்தது. ஆகவே, தேவனுடைய மனதில் இருந்த அந்த இரண்டு தேசங்கள் யாவை? இதற்கான பதிலை இப்பிரிவின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பாகங்களில் காணலாம்.

பிறப்பின்போது சகோதரர்கள் போராடியதைப் பற்றி 25:24-46 வசனங்களிலுள்ள இரண்டாம் பாகம் கூறுகிறது. இச்சிறு பகுதி முன்பு குறிப்பிடப்பட்ட இரண்டு தேசங்களைப் பற்றிய முதல் அடையாளத்தைக் கொடுக்கிறது. மூத்தவனாகிய ஏசா பிறக்கும்போது “சிவந்த” நிறமுள்ளவனாக இருந்ததாக கூறப்பட்டுள்ளது. “சிவந்த” என்று மொழிப்பெயர்க்கப்பட்ட எபிரெய பதம் *அட்மோனி* אַדְמוֹנִי ஆகும். இந்தச் சொல்லாக்கம் வார்த்தைகளில் நுட்பமாக விளையாடுகிறது, ஏனெனில் இது *ஏதோம்* אֱדוֹם என்பதைக் குறிக்கும் எபிரெய பதங்களின் குடும்பத்திலிருந்து எடுக்கப்பட்டது. எனவே இது, ஏசாதான் ஏதோம் தேசத்தின் முற்பிதா என்பதைக் குறிக்கிறது. இரண்டாம் தேசத்தைப் பற்றி ஆதியாகமம் 25:26 இல் அறிகிறோம். அதில் இரண்டாம் குமாரனின் பெயர் யாக்கோபு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாக்கோபு இஸ்ரவேல் தேசத்தின் தகப்பன் என்பது எல்லோரும் நன்கறிந்த ஒன்று.

யாக்கோபும் ஏசாவும் வாலிபர்களாக இருந்தபோது அவர்களுக்கிடையே உண்டான பகையைப் பற்றி மூன்றாம் பாகம் 25:27-34 வசனங்களில் விவரிக்கிறது. இப்பகுதியில், யாக்கோபு ஏசாவை ஏமாற்றி “சிவப்பு நிறக் கூழுக்காக” அல்லது எபிரெய மொழியில் *(அடோம்)* אָדֹם என்பதற்காக அவனுடைய சேஷ்டபுத்திரபாகத்தை வாங்கிக் கொண்டான். இந்த எபிரெய பதம் ஏசா பிறந்தபோது குறிப்பிடப்பட்ட அவனுடைய “சிவந்த” நிறத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிரொலிப்பதாக இருக்கிறது. இதனால்தான் ஏசாவுக்கு “ஏதோம்” என்ற பெயரும் வந்ததாக ஆதியாகமம் 25:30 தெளிவாகக் குறிப்பிடுகிறது.

முன்பு நாம் பார்த்தது போல, மோசே தம் பதிவில் வாசகர்களைக் கவரும் ஒரு முக்கியமான பகுதியை வைத்தார். அவருடைய வாசகர்கள் யாக்கோபுக்கும் அவருடைய சகோதரனாகிய ஏசாவுக்கும் இடையே என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளவிருந்தார்கள். ஆனால், இப்போராட்டம் இரு சகோதரர்களுக்கு இடையேயான போராட்டம் மட்டுமல்ல. இவ்விரு சகோதரர்களும் இஸ்ரவேல் மற்றும் ஏதோம் என்னும் இரண்டு தேசங்களுக்குத் தலைவர்களானார்கள். அதேசமயம், அவர்களுடைய தனிப்பட்ட போராட்டம் இவ்விரு தேசங்களிலும் இருந்த அவர்களுடைய சந்ததியினருக்கு இடையே நிகழவிருந்த போராட்டத்திற்கு நிழலாட்டமாகவும் இருந்தது.

> இஸ்ரவேலுக்கும் ஏதோமுக்கும் இடையேயான ராஜதந்திர உறவுகள், அரசியல் சந்திப்புகள் மற்றும் தொடர்புகளைப் பற்றி யோசிக்கும்போது … அது ஒரு சந்தோஷமான உறவாக இருக்கவில்லை… அவர்கள் ரெபெக்காளின் வயிற்றில் இருந்தபோதும் அப்படியே இருந்தது, அல்லவா? அவர்கள் இருவரும் மோதிக் கொண்டிருந்தார்கள், ஒருவன் மற்றவனை இழுத்துத் தள்ள முற்பட்டான். ஏசாதான் முதலில் வெளியே வந்தான்; எனவே, அவன் தான் முதற்பேறானவன். யாக்கோபோ அவனுக்குப் பின்னால் வந்தவனாக இருந்தும் அவனை இழுக்க முற்பட்டான். அதுவே அவனுக்குப் பெயராயிற்று. யாக்கோபு “இழுத்துத் தள்ளுகிறவனாக” இருந்தான், அல்லவா? “அவன் இழுத்துத் தள்ளுகிறவன்.” இதுதான் பின்னணி. அதன் பின்னர், அவர்கள் வளர்ந்து வரும்போது, இருவரும் இருவேறு குணாதிசயங்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். யாக்கோபு கூடாரத்திலேயே சுற்றிக் கொண்டிருந்து, சாப்பிட்டு வீட்டில் தங்கியிருந்தான், ஏசாவோ வேட்டைக்காரனாக இருந்தான், அல்லவா? ஆனால் யாக்கோபுக்கு ஏசாவிடம் இருக்கும் முதற்பேறானவனின் சுதந்தரம் வேண்டும். அதனால் அவன் ஏசாவுக்காக ஒரு உணவை சமைக்கிறான். ஏசா வெளியிலிருந்து மிகுந்த பசியுடன் வந்தபோது, தன் சகோதரனுடன் மதியீனமாக பேரம் பேசுகிறான். யாக்கோபு ஏசாவிடம், “உனக்குத் தெரியுமா? உனக்காக நல்ல உணவை சமைக்கப் போகிறேன், ஆனால் நீ எனக்கு உன் சுதந்தரத்தைக் கொடுத்து விட வேண்டும்” என்று சொல்கிறான். ஏசாவுக்கு இருந்த பசியில், “நிச்சயமாகத் தருகிறேன்” என்று சொல்லிவிடுகிறான். பிற்பாடு நடந்ததை உணர்ந்து, தன் தகப்பனின் ஆசீர்வாதத்தை வேண்டிக் கேட்கிறான். அதன் பின்னர் யாக்கோபு தன் தாயாருடன்

> கூட்டு சேர்ந்து கொண்டு, ஏசாவைப் போல நடிக்கிறான். ஏசா சரீரம் முழுவதும் ரோமம் நிறைந்த “பலமான” ஆணாக இருந்தான் அல்லவா? ஆகவே, யாக்கோபு தன் கையில் சில ரோமங்களைப் போட்டுக் கொண்டு, ஏசாவைப் போல நடித்து, குடும்பத்தின் முற்பிதாவிடம் ஆசீர்வாதங்களைக் கேட்கிறான். ஈசாக்கு அவனிடம், “சரி, நீ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்” என்று சொல்கிறார். இவ்வாறு ஏசாவின் சேஷ்டபுத்திரபாகம் திருடப்பட்டது. அதனால் இருவருக்குமிடையே பகை உண்டாகிறது. பின்னர் யாக்கோபு தன் சகோதரன் தன்னைக் கொலை செய்ய நினைத்ததால் அங்கிருந்து புறப்பட வேண்டியதாயிற்று. எனவே, அது இரு சகோதரருக்கு இடையேயான நல்லதொரு உறவல்ல… பின்னர் அவர்கள் தேசங்களாக மாறிய பின்னர் அது இன்னும் பெரிதாயிற்று; அவர்கள் ஒருவரையொருவர் வெறுக்கிறார்கள். சரித்திரம் அதற்கு சான்றாக இருக்கிறது.
>
> – Dr. டாம் பெட்டர்

இவ்வாறு யாக்கோபு, ஏசா மற்றும் அவர்களுடைய சந்ததியின் மீது கவனம் செலுத்தும் முதல் பிரிவு, 35:16-37:1 யிலுள்ள ஏழாம் அல்லது கடைசிப் பிரிவான சகோதரர்களின் போராட்ட முடிவை விளங்கிக் கொள்ள உதவுகிறது.

## போராட்டத்தின் முடிவு (ஆதியாகமம் 35:16-37:1)

இப்பிரிவில், மீண்டும் யாக்கோபு, ஏசா, மற்றும் அவர்களுடைய இரண்டு தேசங்கள் மீது மோசே கவனம் செலுத்தினார். இதை அவர் மூன்று பகுதிகளாகச் செய்தார். முதல் பகுதியான ஆதியாகமம் 35:16-26 இல் அவர் யாக்கோபின் வம்சவரலாற்றை பதிவு செய்தார். இப்பகுதி, யாக்கோபின் சந்ததியினர் எவ்வாறு இஸ்ரவேல் தேசத்தை அமைத்தனர் என்பதை விளக்குகிறது. அதில் பென்யமீன் மற்றும் ரூபன் பற்றிய சிறுகுறிப்புகளும், இறுதியில் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுடைய முற்பிதாக்களின் பெயர்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

இரண்டாம் பகுதியான ஆதியாகமம் 35:27-29 இல், ஈசாக்கு மரணமடைந்த பின்னர் யாக்கோபும் ஏசாவும் நடந்து கொண்ட விதத்தை மோசே விவரிக்கிறார். யாக்கோபும் ஏசாவும் ஈசாக்கை அடக்கம் பண்ணினார்கள் என்று இச்சிறு பத்தி அறிவிக்கிறது. ஆதியாகமம் 27:41 இல், தங்கள் தகப்பன் மரித்த பின்னர் யாக்கோபை கொன்று போடுவதாக ஏசா பயமுறுத்தியதைப் பற்றி யோசித்துப் பார்க்கும்போது, இப்பகுதியின் விபரம் தெளிவாகிறது. இதன்படி, ஈசாக்கின் மரணத்தைப் பற்றிய விபரம் சகோதரர்களுக்கிடையேயான போராட்டம் முடிந்தது என்பதைக் குறிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூன்றாம் பகுதியான ஆதியாகமம் 36:1-43 இல், மோசே ஏசாவின் வம்சவரலாற்றை விளக்கமாகப் பதிவு செய்திருக்கிறார். இப்பதிவு ஏசாவினுடைய வம்சத்தின் பல்வேறு பகுதிகளைக் குறிப்பிடும் இரு வம்சவரலாறுகளை இணைக்கிறது. சேயீர் மலைநாட்டில் ஆளுகை செய்த ராஜாக்களின் பட்டியலோடு இப்பிரிவு நிறைவடைகிறது. அதன் பின்னர், 37:1 இல் யாக்கோபு தொடர்ந்து கானான் தேசத்தில் சஞ்சரித்து வந்தார் என்னும் சிறுகுறிப்பை மோசே சேர்த்திருக்கிறார். ஏசாவின் வம்சவரலாற்றை இவ்விதமாக நிறைவு செய்ததிலிருந்து, யாக்கோபு மற்றும் ஏசாவுக்கிடையேயான போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டாலும், சகோதரர்கள் இருவரும் பிரிந்து சென்றுவிட்டார்கள் என்பதை மோசே தெளிவுபடுத்துகிறார். யாக்கோபின் சந்ததியார் கானானிலும், ஏசாவின் சந்ததியார் ஏதோமிலும் வசித்தார்கள்.

யாக்கோபின் வாழ்க்கையின் முதல் மற்றும் கடைசிப் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்டிருப்பவைகளை மனதில் கொண்டு, மோசேயுடைய பதிவின் மையப்பகுதிக்கு நேராக இன்னும் ஒருபடி நெருங்கிச் செல்வோம். அது, வாக்குத்தத்த தேசத்தில் முற்பிதாக்களின் சந்திப்புகளைப் பற்றிய இரண்டாம் மற்றும் ஆறாம் பிரிவுகளாகும்.

## ஈசாக்கும் பெலிஸ்தியரும் (ஆதியாகமம் 26:1-33)

இப்பிரிவுகள், ஆதியாகமம் 26:1-33 –லுள்ள ஈசாக்கு மற்றும் பெலிஸ்தியருக்கு இடையேயான சமாதானமான சந்திப்புகளையும், ஆதியாகமம் 33:18-35:15 –லுள்ள யாக்கோபு மற்றும் கானானியருக்கு இடையேயான பகையான சந்திப்புகளையும் ஒப்பிடுகின்றன. முதலில், ஈசாக்கிற்கும் பெலிஸ்தியருக்கும் இடையேயான சந்திப்புகளை விவரிக்கும் இரண்டாம் பிரிவில் தொடங்குவோம்.

ஆதியாகமத்தில் இந்த அதிகாரம் சரியான இடத்தில் வைக்கப்படவில்லை என்று அநேக விமர்சன வியாக்கியான அறிஞர்கள் விவாதம் செய்திருக்கிறார்கள். யாக்கோபிற்கு பதிலாக ஈசாக்கின் மீது கவனம் செலுத்துவதை நாம் காணலாம். மேலும், இச்சம்பவங்கள் யாக்கோபும், ஏசாவும் பிறப்பதற்கு முன்னர் நடந்தன என்பதும் உண்மையாக இருக்கலாம். ஆனால், நாம் பார்க்கவிருப்பது போல, இப்பிரிவு யாக்கோபின் வாழ்க்கையின் மீதான மோசேயின் கவனத்திற்கு மிக முக்கியமானது.

இப்பகுதி, நெருங்கிய தொடர்புடைய இரு பாகங்களாகப் பிரிகிறது. முதல் பாகம், ஈசாக்கு முதலில் பெலிஸ்தியருடன் சமாதானமாக இருந்ததை 26:1-11 வசனங்களில் விவரிக்கிறது. இவ்வசனங்களில், ஈசாக்கு ரெபெக்காளை தன் சகோதரி என்று சொல்லி, பெலிஸ்திய ராஜாவாகிய அபிமெலேக்கை ஏமாற்றினார். ஈசாக்குத் தன்னை ஏமாற்றியதை அறிந்த அபிமெலேக்கு ரெபெக்காளை மீண்டும் ஈசாக்கிடம் ஒப்படைத்தான். அதன் பின்னர் அவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஈசாக்கு தங்கள் தேசத்தில் தங்கும்படி அனுமதி கொடுத்து, அவர்களுக்கு யாரும் எவ்விதத்திலும் தீங்கு செய்யக் கூடாது என்று தன் மக்களுக்குக் கட்டளையிட்டான்.

இரண்டாம் பாகம், ஈசாக்கு தொடர்ந்து பெலிஸ்தியருடன் சமாதானமாக இருந்ததை 26:12-33 இல் விவரிக்கிறது. இப்பிரிவில், தேவன் ஈசாக்கை ஆசீர்வதித்தார், ஆனால் அவருடைய ஏராளமான மந்தைகளால் பெலிஸ்தியர் அவர் மீது பொறாமை கொண்டார்கள். ஆகவே, ஈசாக்கு வன்முறையைத் தவிர்க்கும்படி ஒரு துரவிலிருந்து மறு துரவிற்கு இடம் பெயர்ந்து கொண்டே இருந்தார். இறுதியில், அபிமெலேக்கு ஈசாக்கின் மீதிருந்த தேவனுடைய ஆசீர்வாதத்தை அறிந்து கொள்ள, அவர்கள் இருவரும் பெயர்செபாவில் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

ஈசாக்கு பெலிஸ்தியருடன் சமாதானமாக இருந்ததைப் பற்றிய இந்த விபரம், ஈசாக்கும் அவருடைய குமாரனாகிய யாக்கோபும் ஆபிரகாமின் வம்சாவளிகள் என்னும் உண்மை நிலையை மேற்கோளிட்டுக் காண்பிக்கிறது. இப்பிரிவில் உள்ளதையும், ஆபிரகாமின் வாழ்க்கையில் நடந்ததையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது ஆபிரகாமின் வாழ்க்கையில் நடந்த பல சம்பவங்களுடன் ஒத்திருப்பதைக் காணலாம். ஆபிரகாமுக்கும் அபிமெலேக்கு என்னும் பெலிஸ்திய ராஜாவுடன் ஒரு சந்திப்பு நிகழ்ந்ததை ஆதியாகமம் 20:1-18 இல் காணலாம். ஆதியாகமம் 21:30 மற்றும் 34 இல் ஆபிரகாம் துரவுகளைத் தோண்டி, பெலிஸ்தியர் மத்தியில் வசித்ததாக சொல்லப்பட்டுள்ளது. ஆபிரகாமும் பெயர்செபாவில் பெலிஸ்தியருடன் உடன்படிக்கை செய்தார் என்று ஆதியாகமம் 21:22-34 இல் காணலாம். ஈசாக்கு பெலிஸ்தியருடன் சமாதானமான உறவில் இருந்ததை தேவன் அங்கீகரித்ததைப் பற்றிய எல்லா சந்தேகங்களையும் நீக்கும்படி மோசே இந்த ஒப்பீடுகளை அமைத்திருந்தார்.

ஈசாக்கு பெலிஸ்தியருடன் கொண்டிருந்த தொடர்புகளிலிருந்து, இப்போது யாக்கோபுக்கும் கானானியருக்கும் இடையே இருந்த சந்திப்புகளில் கவனம் செலுத்தும் யாக்கோபினுடைய வாழ்க்கையின் ஆறாம் பகுதியான 33:18-35:15 வசனங்களுக்குத் திரும்புவோம்.

## யாக்கோபும் கானானியரும் (ஆதியாகமம் 33:18-35:15)

கானானியருடனான யாக்கோபின் முரண்பாடும் இரு நெருங்கிய தொடர்புடைய பாகங்களைக் கொண்டுள்ளது. முதல் பாகம் 33:18-34:31 இல் சீகேமில் ஏற்பட்ட யாக்கோபின் முரண்பாட்டைப் பற்றியது. யாக்கோபு கானானியரின் மத்தியில் வாழ்ந்தபோது, ஏமோரின் மகனாகிய சீகேம் யாக்கோபின் மகளாகிய தீனாளைத் தீட்டுப்படுத்தினான். தங்கள் சகோதரியை இவ்விதமாக நடத்தியதற்கு பதில் கொடுக்கும் விதத்தில், விருத்தசேதனம் செய்து கொண்டால் சீகேமியர்கள் மன்னிக்கப்படுவார்கள் என்று யாக்கோபின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குமாரர்கள் அவர்களை நம்பப் பண்ணி ஏமாற்றினார்கள். சீகேமியர் விருத்தசேதனம் செய்து வலியுடன் இருந்தபோது, யாக்கோபின் குமாரரான சிமியோனும், லேவியும் அவர்களைத் தாக்கி எல்லோரையும் கொன்றுபோட்டார்கள். அதன் பின்னர், கானானியர் தன் குடும்பத்தை அழிக்கும்படி பழிவாங்கத் தேடுவார்களே என்று யாக்கோபு பயந்தார். யாக்கோபின் குமாரர்கள் தாங்கள் செய்தது சரிதான் என்று வலியுறுத்தினாலும், ஆதியாகமம் 49:5-7 இல் உள்ள சிமியோனையும், லேவியையும் பற்றிய யாக்கோபின் இறுதி வார்த்தைகள் வேறுவிதமாக உணர்த்துகின்றன.

இரண்டாம் பாகத்தில், பெத்தேலில் யாக்கோபு தேவனிடமிருந்து ஒரு தத்ரூபமான நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டார் என்று ஆதியாகமம் 35:1-15 கூறுகிறது. 35:2-4 இல், பெத்தேலில் ஒரு பலிபீடம் கட்டுவதற்காக யாக்கோபு தன்னையும், தன குடும்பம் முழுவதையும் பரிசுத்தப்படுத்தினார். அதன் விளைவாக, கானானியர் மீது தேவனுடைய பயங்கரம் வந்தது, அதன் பின்னர் அவர்கள் யாக்கோபைத் தொடரவில்லை. யாக்கோபு பெத்தேலில் பலிபீடம் கட்டி முடித்ததும், தேவன் அவருடன் பேசி, அவர்தான் அவர் தகப்பனுடைய வாரிசு என்று உறுதிப்படுத்தினார். இதை நாம் குறிப்பாக 35:10-12 இல் காண்கிறோம், இங்கு, முன்பு தேவன் 26:3-4 இல் ஈசாக்கிடம் சொன்ன வார்த்தைகளுக்கு ஒத்த வார்த்தைகளைப் பேசுகிறார். யாக்கோபு தனக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்துவதுடன் இந்த பாகம் நிறைவடைகிறது.

இரண்டாம் பிரிவைப் போல, இந்த அத்தியாயங்களிலும் ஆபிரகாமுக்கும், யாக்கோபுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதைக் காண்கிறோம். ஆதியாகமம் 12:7 இல் யாக்கோபுக்கு முன்னர் ஆபிரகாம் செய்தது போல, 33:20 இல் யாக்கோபு சீகேமில் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டினார். மேலும், 35:6-7 இல், யாக்கோபு சீகேமிலிருந்து பெத்தேலுக்குச் சென்று, ஆபிரகாம் 12:8 இல் செய்தது போல அங்கும் ஒரு பலிபீடத்தைக் கட்டினார். இரண்டாம் பிரிவைப் போலவே, ஆபிரகாமின் வாழ்க்கையுடன் இருந்த நேர்மறையான தொடர்புகள் யாக்கோபு கானானியருடன் கொண்டிருந்த முரண்பாட்டை தேவன் அங்கீகரித்தார் என்பதைக் காண்பிக்கின்றன.

இப்போது, யாக்கோபும், ஏசாவும் மீண்டும் பிரிந்ததைப் பற்றிய மூன்றாம் மற்றும் ஐந்தாம் பிரிவுகளைக் காண்போம். இந்த விவரங்கள் சகோதரர்கள் பிரிந்து சென்ற இரு வேறு தருணங்களில் கவனம் செலுத்துகின்றன. மூன்றாம் பிரிவு, யாக்கோபும், ஏசாவும் பகையுடன் பிரிந்து சென்றதை 26:34-28:22 இல் விவரிக்கிறது. ஐந்தாம் பிரிவு, யாக்கோபும், ஏசாவும் சமாதானத்துடன் பிரிந்து சென்றதை ஆதியாகமம் 32:1-33:17 இல் விவரிக்கிறது. யாக்கோபும், ஏசாவும் பகையுடன் பிரிந்து சென்றதைப் பற்றி இங்கு பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பகையுடனான பிரிவு (26:34-28:22)

இந்தச் சம்பவங்களின் நெறிமுறை சிக்கல்களைக் காண்பிக்கும் விதத்தில் இப்பிரிவு ஏசாவையும், யாக்கோபையும் சுற்றி நடக்கும் நான்கு சம்பவங்களில் மாறி மாறி கவனம் செலுத்துகின்றது. 26:34 இல் உள்ள முதல் சம்பவம் ஏசா தன் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக ஏத்தியப் பெண்ணைத் திருமணம் செய்து தன் பெயரைக் கெடுத்துக் கொண்டதைப் பற்றிய சிறு பதிவாக உள்ளது. 27:1-28:5 இல் உள்ள இரண்டாம் சம்பவத்தில், யாக்கோபின் வஞ்சகம் எவ்வாறு ஈசாக்கின் ஆசீர்வாதத்தைப் பெற்றது என்பதைப் பற்றிய நீண்டதொரு விபரத்தை வாசிக்கிறோம். நன்கறிந்த இந்தக் கதையில், யாக்கோபு தன் தகப்பனை வஞ்சித்து, ஏசாவுக்குரிய ஆசீர்வாதங்களைப் பறித்துக் கொண்டார். நடந்ததை அறிந்த ஏசா ரெபெக்காள் யாக்கோபின் உயிரைப் பற்றி பயப்படும் அளவிற்கு கோபமுற்றான். அவள் ஈசாக்கிடம் பேசி, யாக்கோபு பதான் அராமில் இருந்த தன் உறவினர்களிடம் சென்று அங்கு தனக்கு ஒரு மனைவியைக் கண்டு கொள்ளும்படி அவனை அனுப்பிவிடும்படி செய்தாள். மூன்றாம் சம்பவத்தில், வாசகர்கள் ஏசா மீது அளவுக்கதிகமாக பரிதாபப்பட்டு விடக்கூடாது என்று 28:6-9 வசனங்களில், ஏசா தன் பெற்றோருக்கு மனநோவாயிருந்த இஸ்மவேலின் குமாரத்திகளை திருமணம் செய்தான் என்று மோசே குறிப்பிடுகிறார். நான்காம் மற்றும் கடைசி சம்பவம், 28:10-22 வசனங்களில், தேவன் பெத்தேலில் யாக்கோபுக்கு ஒரு சொப்பனத்தின் மூலமாக யாக்கோபின் ஆசீர்வாதத்தைக் காண்பித்ததைக் குறிப்பிட்டு, ஈசாக்கின் வாரிசாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன் யாக்கோபே என்பதை உறுதிபடுத்துகிறது.

## சமாதானமான பிரிவு (ஆதியாகமம் 32:1-33:17)

யாக்கோபும், ஏசாவும் பகையுடன் பிரிந்து சென்றதைப் பற்றிய மூன்றாம் பிரிவின் விபரத்திற்கு மாறாக யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றிய ஐந்தாம் பிரிவு சகோதரர்கள் சமாதானத்துடன் பிரிந்ததை 32:1-33:17 இல் விவரிக்கிறது. இப்பிரிவில் நெருங்கிய தொடர்புடைய இரு பாகங்கள் உள்ளன. முதல் பாகமான 32:1-32 இல், ஏசாவை சந்திக்க யாக்கோபு ஆயத்தமாவதை காணலாம். அவர்கள் பகையுடன் பிரிந்து பல வருடங்கள் ஆன பிறகு யாக்கோபு தனக்கு முன்னால் தூதுவர்களையும், பரிசுகளையும் அனுப்பி ஏசாவை சந்திக்க ஆயத்தமானார். ஒசியா 12:4 இன் படி, ஏசாவை சந்திப்பதற்கு முந்தின இரவில் யாக்கோபு சிறுமைப்படுத்தப்பட்டு, ஒரு தூதனுடன் போராடி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

> யாக்கோபே ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளப் போகிறவன் என்ற வாக்குத்தத்தம் ரெபெக்காளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டாயிற்று என்று பார்க்கிறோம்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆனால் ஆசீர்வாதத்தைப் பெற யாக்கோபு தெரிந்து கொண்ட வழி … அவர் தன் தகப்பனை ஏமாற்றினார், தன் பெயரை அவர் கேட்டபோது, “என் பெயர் ஏசா, உம்முடைய முதற்பேறானவன்” என்று சொன்னார். அவர் பொய் சொல்கிறார்… ஆனால், தேவன் அவரை ஆசீர்வதித்தார்; அவரைப் பெருகச் செய்து, - “உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போல இருக்கும்” என்று - ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறத் தொடங்கும் விதத்தில் அவருக்குப் பிள்ளைகளைக் கொடுக்கிறார். ஆனால், அவர் மீண்டும் வாக்குத்தத்த தேசத்திற்கு வந்தபோது, தன் கடந்த காலத்தை சந்தித்தே ஆக வேண்டியதாக இருந்தது. இம்முறை, ஏசாவை சந்திப்பதற்கு முந்தின இரவில், அவர் ஒரு தூதனுடன் போராடினார். அந்த தூதன் அவரிடம், “உன் பெயர் என்ன?” என்று கேட்டபோது, இம்முறை “என் பெயர் யாக்கோபு” என்று உண்மையைச் சொல்கிறார். அப்போது அவருக்கு “இஸ்ரவேல்” என்னும் ஒரு புதிய பெயர் கொடுக்கப்பட்டது.
>
> – Dr. கிரெய்க் எஸ். கீனர்

33:1-17 இல் உள்ள இரண்டாம் பாகம், யாக்கோபு ஏசாவுடன் ஒப்புரவானதைப் பற்றி அறிவிக்கிறது. இப்பிரிவில், சகோதரர்கள் சந்தித்து, பின்னர் சமாதானத்துடன் பிரிந்து செல்கிறார்கள். இப்பிரிவிற்கும் இதன் இணைப் பிரிவிற்கும் இடையேயான வித்தியாசம் தெளிவானது. யாக்கோபு இப்போது வஞ்சிக்கிறவன் அல்ல, மாறாக உண்மையும் தாழ்மையுமுள்ளவனாகி விட்டான். ஏசா இப்போது பழிவாங்கத் தேடவில்லை, மாறாக மன்னித்துவிடுகிறான். இறுதியில், இந்த இரட்டையருக்கு இடையில் முன்பிருந்த பகை தீர்மானமாக மாறி, அவர்கள் இருவரும் தங்கள் தங்கள் வழியில் பிரிந்து சென்றார்கள். ஏசாவைப் பற்றிய குறிப்பு கதையில் இல்லாமல் போவதோடு இப்பிரிவு நிறைவடைகிறது. அதன் பின்னர் 34 ஆம் அதிகாரத்தில், கானானியர்களும், புதியதொரு இட அமைப்புகளும் தோன்றுகின்றன. இவையனைத்தும் நம்மை ஆதியாகமம் 29:1-31:55 இல் யாக்கோபு லாபானுடன் இருந்த காலத்தைப் பற்றிய நான்காம் மற்றும் மையப் பிரிவிற்கு அழைத்துச் செல்கின்றன.

## லாபானுடனான காலம் (ஆதியாகமம் 29:1-31:55)

யாக்கோபு லாபானுடன் தங்கியிருந்த காலம் ஐந்து முக்கியப் பகுதிகளாகப் பிரிகிறது. இது, 29:1-14 இல் யாக்கோபு பதான் அராமுக்கு வந்து சேர்வதுடன் தொடங்குகிறது. அதன் பின்னர் 29:14-30 இல் லாபான் யாக்கோபை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏமாற்றியதையும், யாக்கோபுக்குத் தன் குமாரத்திகளைத் திருமணம் செய்து கொடுத்ததையும் பற்றி அறிகிறோம். யாக்கோபின் திருமணங்களுக்குப் பின்னர், 29:31-30:24 இல், இஸ்ரவேலின் கோத்திரப் பிதாக்களாகிய யாக்கோபின் பிள்ளைகள் பிறப்பதைப் பற்றி வாசிக்கிறோம். லாபான் முன்பு வஞ்சித்ததற்குப் பதிலாக யாக்கோபு 30:25-43 இல் யாக்கோபு தான் வேலை செய்த வருடங்களுக்கான சம்பளத்தைக் கேட்டு லாபானை வஞ்சித்ததைப் பற்றி மோசே குறிப்பிடுகிறார். இறுதியாக, 31:1-55 இல், யாக்கோபு பதான் அராமிலிருந்து புறப்படுவதையும், லாபானுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கையையும் பற்றிக் காண்கிறோம். இந்த முக்கிய அதிகாரங்கள் பலவிதமான வஞ்சகங்களையும், முரண்பாடுகளையும் விவரிக்கின்றன. ஆனால், நாம் இனி பார்க்கவிருப்பது போல இவை அனைத்தும் யாக்கோபுக்குள் ஒரு தீவிரமான மாற்றத்தைக் கொண்டு வந்தன.

> யாக்கோபைப் பற்றிய விபரங்களை ஆதியாகமம் 25-37 இல் வாசிக்கும்போது, யாக்கோபின் வாழ்க்கையில் நடந்த குறிப்பிடத்தக்க தொடர் நிகழ்வுகளைக் காணலாம். ஒரு எத்தனாகத் தொடங்கும் அவர் பின்னர் தேவனிடமிருந்து ஒரு வியத்தகு வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்கிறார். அதில், தேவன் யாக்கோபு செய்து வந்த வஞ்சகத்தைப் பற்றிக் குறிப்பிடாமல், ஆபிரகாமின் அனைத்து வாக்குத்தத்தங்களையும் யாக்கோபினிடத்தில் புதுப்பிக்கிறார். தேவன் அந்த வாக்குத்தத்தங்களின்படி தனக்கு அருளிச் செய்தால், தான் தேவனுக்கு ஒரு சிறு பகுதியைக் கொடுப்பதாக தேவனுடன் பேரம் பேசும் யாக்கோபு பேரம் பேசுகிறவாராக மாறுகிறார். ஆனால், அது ஒரு அருமையான பேரம், ஏனென்றால் யாக்கோபு தன்னை விட அதிக வஞ்சகனாகிய லாபானைச் சந்தித்த நிலையில் தேவன் தம் வாக்குத்தத்தங்களைக் காத்துக் கொண்டார். யாக்கோபு தன் வாழ்வில் தேவனுடைய ஆசீர்வாதம் இருப்பதை உணர்ந்தபோது, அவர் தேவன் மீது – குறைந்தது சிறு சிறு காரியங்களிலாவது - நம்பிக்கை வைக்க அதிகமதிகமாக விரும்பினார் என்பது தெளிவாகிறது. ஏனெனில், தேவன் அவரை தன் சொந்த தேசத்திற்குத் திரும்பிப் போகச் சொன்னபோது, அவர் அதைச் செய்ய முன்வந்தார். இறுதியாக, தன் சகோதரன் ஆயுதமணிந்த வீரர்களுடன் தன்னைச் சந்திக்க வருவதைக் கேள்விப்பட்ட வஞ்சகனும், பேரம் பேசுகிறவனுமாகிய யாக்கோபு தோற்கடிக்கப்பட்டவனாக மாறுகிறார். பின்னர், தேவன் யாக்கோபிடம் வந்தபோது, “என் தகப்பன் அல்லது ஏசாவின் ஆசீர்வாதங்கள் அல்ல – உம்முடைய ஆசீர்வாதமே எனக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேண்டும்!" என்று கேட்ட தருணத்தில் தோற்கடிக்கப்பட்ட யாக்கோபு, விடுவிக்கப்படுகிறார். நிறைவாக, இவ்விதத்தில் அவர், தேவன் மீது நம்பிக்கை வைக்க விரும்புகிறவர், மற்றும் தனக்குச் சாதகமாக எல்லாவற்றையும் மாற்ற அவசியமற்றவர் என்ற நிலைக்கு வந்துவிடுகிறார்.

– Dr. ஜான் ஆஸ்வால்ட்

முற்பிதாவாகிய யாக்கோபைப் பற்றிய நம்முடைய பாடத்தின் இந்தப் பகுதி வரை ஆதியாகம புத்தகத்தில் உள்ள யாக்கோபின் வாழ்க்கை சரிதையின் அமைப்பையும், பொருளடக்கத்தையும் ஆய்வு செய்திருக்கிறோம். இப்போது, 'இந்த அதிகாரங்களில் உள்ள முக்கிய கருப்பொருள்கள்' என்னும் நம்முடைய இரண்டாம் முக்கிய தலைப்புக்குத் திரும்ப வேண்டியது அவசியம்.

# முக்கிய கருப்பொருள்கள்

துரதிஷ்டவசமாக, கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் யாக்கோபின் கதை பெரும்பாலும் தனிப்பட்ட விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையில் நேரடியாகப் பிரயோகித்துக் கொள்வதற்காகவே முக்கியமாக எழுதப்பட்டிருக்கிறது என்பது போல நடந்து கொள்வார்கள். ஆதியாகமத்தின் இப்பகுதி தனிநபர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றி அதிகம் சொல்கிறது என்பது உண்மைதான். அதேசமயம், தனிப்பட்ட சராசரி விசுவாசியால் வாசிக்க முடிய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் ஆதியாகமம் எழுதப்படவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். பண்டைய இஸ்ரவேலின் தலைவர்களால் மட்டுமே வேதவசனங்களை நேரடியாக வாசிக்க முடிந்தது. ஆகவே, முக்கியமாக இஸ்ரவேல் என்னும் முழு தேசத்துடன் தொடர்புடைய காரியங்களைப் பற்றிப் பேசும்படி யாக்கோபின் வாழ்க்கை எழுதப்பட்டது. தேவன் வாக்குத்தத்த தேசத்தில் தம் ராஜ்யத்தைக் கட்டும் ஊழியத்துடன் இஸ்ரவேல் தேசத்தினரை ஏற்படுத்தியிருந்தார். அங்கிருந்து அவர்கள் பூமியின் கடைசி பரியந்தம் அவருடைய ராஜ்யத்தைப் பரவச் செய்ய வேண்டியதாக இருந்தது. ராஜ்யத்தைக் கட்டி எழுப்பும் இந்தப் பணி, யாக்கோபின் வாழ்க்கையிலிருந்து பண்டைய இஸ்ரவேலருக்கும், இன்றும் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் வாழும் உங்களுக்கும் எனக்கும் உரிய முக்கிய கருப்பொருள்களை அடையாளம் காண உதவுகிறது.

ஆபிரகாமைப் பற்றிய பாடத்தில், ஆபிரகாமின் மீதான தேவகிருபை, தேவன் மீதான ஆபிரகாமின் விசுவாசம், ஆபிரகாமுக்கான தேவனுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் ஆபிரகாம் மூலமாக மற்றவர்களுக்குக் கிடைத்த தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்ற நான்கு முக்கிய கருப்பொருள்களை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மோசே வலியுறுத்தினார் என்று பார்த்தோம். இதே கருப்பொருள்கள் மீண்டும் யாக்கோபின் வாழ்க்கையிலும் காணப்படுகின்றன. இதற்காக, யாக்கோபின் வாழ்க்கை சரித்திரம் எப்படி இந்த நான்கு முக்கிய கருப்பொருள்களையும் வலியுறுத்துகிறது என்று பார்ப்போம். முதலில், இஸ்ரவேலின் மீதான தேவனுடைய கிருபையைப் பற்றிப் பார்ப்போம்; இரண்டாவதாக, இஸ்ரவேலர் தேவனிடம் கொண்டிருக்க வேண்டிய விசுவாசத்தைப் பற்றியும், மூன்றாவதாக, இஸ்ரவேலுக்கான தேவனுடைய ஆசீர்வாதங்களையும், நான்காவது மற்றும் இந்த அதிகாரங்களின் மிக முக்கிய அம்சமாக, இஸ்ரவேலர் மூலமாக மற்றவர்களுக்குக் கிடைத்த தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பற்றியும் பார்ப்போம். யாக்கோபின் கதை இஸ்ரவேலர் மீதான தேவனுடைய கிருபையில் கவனம் செலுத்தும் ஒருசில வழிகளைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## இஸ்ரவேலின் மீதான தேவகிருபை

இஸ்ரவேலின் மீதான தேவகிருபையை நாம் இரு வழிகளில் ஆய்வு செய்வோம். ஒருபுறத்தில், இந்தக் கருப்பொருள் எவ்வாறு மோசே ஆதியில் கொண்டிருந்த அர்த்தத்தில் கவனம் செலுத்துகிறது என்றும், அவர் எப்படி பண்டைய இஸ்ரவேல் வாசகர்களுக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த விரும்பினார் என்றும் பார்ப்போம். மறுபுறத்தில், ஆதியாகமத்தின் இப்பகுதியை நாம் வாழும் நவீன காலத்தில் பிரயோகிக்கும்போது, தெய்வீகக் கிருபையைப் பற்றிய கருப்பொருள் எவ்விதங்களில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை கவனிப்போம். முதலில் மோசே ஆதியில் அர்த்தப்படுத்தியது என்னவென்று பார்ப்போம்.

### ஆதி அர்த்தம்

பொதுவான விதங்களில், இஸ்ரவேலரின் வாழ்க்கையில் இருந்த தேவகிருபையைப் பற்றி அவர்களுக்குப் போதிப்பதற்காக யாக்கோபின் வாழ்க்கையில் இருந்த தேவகிருபையை மோசே மூன்று விதங்களில் வலியுறுத்தினார்.

***கடந்தகால கிருபை.*** முதலில், யாக்கோபு பிறப்பதற்கு முன்னமே தேவன் யாக்கோபுக்கு கடந்தகால கிருபையை எவ்வாறு தெரிவித்தார் என்று மோசே குறிப்பிடுகிறார். யாக்கோபுடைய கதையின் ஆரம்ப பாகம் இந்தக் கருப்பொருளுக்கு நேராக நம் கவனத்தைத் திருப்புகிறது. தேவன் ரெபெக்காளிடம் ஆதியாகமம் 25:23 இல் சொன்னதை மீண்டும் பாருங்கள்:

> இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது;
> இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும்,
> அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் (ஆதியாகமம் 25:23)

ரோமர் 9:11-12 இல், யாக்கோபு சரியோ தவறோ செய்வதற்கு முன்பாகவே தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொண்டார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். அதே போன்று, மோசேயைப் பின்பற்றி வாக்குத்தத்த தேசத்திற்குச் சென்ற இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் செய்த தயவு தேவனுடைய கடந்தகால இரக்கங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதனை மோசே உபாகமம் 7:7-8 இல் இவ்வாறு கூறினார்:

> சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; … கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், உங்கள் பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் … உங்களை மீட்டுக்கொண்டார் (உபாகமம் 7:7-8).

**தொடரும் கிருபை.** இரண்டாவதாக, யாக்கோபின் வாழ்க்கையில் தொடர்ந்து இருக்க வேண்டிய தேவகிருபையையும் மோசே வலியுறுத்தினார். இது, தங்கள் வாழ்வில் தேவகிருபை தொடர்ந்து இருக்க வேண்டியது எந்த அளவுக்கு அவசியம் என்பதை இஸ்ரவேலருக்குக் கற்பித்தது. இதைப் பற்றி முதலில் ஆதியாகமம் 25:24-26 இல் உள்ள யாக்கோபின் பிறப்பைப் பற்றிய பதிவில் காணலாம். ஆதியாகமம் 25:26 ஐக் கவனியுங்கள்:

> பின்பு, அவன் சகோதரன் தன் கையினாலே ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான்; அவனுக்கு யாக்கோபு என்று பேரிட்டார்கள் (ஆதியாகமம் 25:26).

சகோதரர்கள் பிறக்கும்போது, யாக்கோபு “ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக் கொண்டிருந்ததால்” அவருக்கு இந்தப் பெயர் கிடைத்தது. எபிரெயத்தில், *யாக்கோபு יַעֲקֹב* என்னும் பெயர், “குதிங்கால்” அல்லது எபிரெயத்தில் *அக்கீப் עָקֵב* என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தையிலிருந்து வருகிறது. அதாவது, யாக்கோபு என்னும் பெயருக்கு “குதிங்காலைப் பிடித்துக் கொண்டான்” என்று அர்த்தம். ஆனால், யாக்கோபு பிறப்பிலேயே முதல்பேறானவனின் ஸ்தானத்தைப் பெற முயற்சி செய்ததால், இந்த இடத்தில் அவருடைய பெயர் சற்று வித்தியாசமான அர்த்தத்தில் வஞ்சகன் என்று பொருள்படுகிறது. யாக்கோபு என்னும் பெயருக்கு “தந்திரவாதி” என்னும் அர்த்தமும் உண்டு. இது, ஆதியாகமம் 27:36 இல் யாக்கோபு

ஈசாக்கை தந்திரமாக ஏமாற்றி ஏசாவின் ஆசீர்வாதத்தைப் பறித்துக் கொண்டபோது, ஏசா நடந்துகொண்ட விதத்தை விளக்குகிறது:

> அப்பொழுது அவன்: அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது சரியல்லவா? இதோடே இரண்டுதரம் என்னை மோசம்போக்கினான்; என் சேஷ்ட புத்திரபாகத்தை எடுத்துக்கொண்டான்; இதோ, இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும் வாங்கிக்கொண்டான் (ஆதியாகமம் 27:36).

யாக்கோபின் பெயர் அவருடைய செய்கைகளுக்கு மிகவும் பொருத்தமாக இருந்ததோடு, அவருக்குத் தன் வாழ்வில் ஒவ்வொரு நாளும் தேவனுடைய கிருபை தொடர்ந்து இருக்க வேண்டியது அவசியமாயிற்று என்பதையும் தெளிவுபடுத்துகிறது. மோசே குறிப்பாகத் தன் ஆதி வாசகர்களுக்கு ஏற்ற விதத்தில் அடிக்கடி தேவனுடைய தொடரும் கிருபையின் மீது அவர்களது கவனத்தைத் திருப்பினார்.

ஆதியாகமம் 26:26-33 இல், தேவன் யாக்கோபின் தகப்பனாகிய ஈசாக்குக்கு பெலிஸ்தியர் மத்தியில் பாதுகாப்புக் கொடுத்ததன் மூலம் அவருக்கு இரக்கம் பாராட்டினார். மோசே இந்த அதிகாரங்களை எழுதியபோது, இஸ்ரவேலைச் சேர்ந்த அவருடைய வாசகர்களுக்கும் தங்களை பெலிஸ்தியரிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு தேவ கிருபை அவசியமாக இருந்தது. அதோடு, 34:1-3 இல், தேவன் கிருபையாக யாக்கோபுக்கு கானானியர் மீது வெற்றியைக் கொடுத்தார். இந்த உதாரணங்களிலிருந்து, மோசேயின் ஆதி வாசகர்கள் தங்கள் காலத்தில் கானானியர் மீது வெற்றி பெற எப்படி அவர்களுக்கு தேவனுடைய தொடரும் கிருபை அவசியமானது என்பதை அறிந்து கொண்டார்கள்.

**இனிவரும் கிருபை.** மூன்றாவதாக, யாக்கோபின் கதை இனிவரும் தேவகிருபையின் மீதும் கவனத்தை செலுத்துகிறது. மீண்டும் ஒருமுறை நாம் இந்தக் கருப்பொருளை மோசேயினுடைய பதிவின் ஆரம்ப பகுதிகளில் காண்கிறோம். ஆதியாகமம் 25:23 இல் யாக்கோபு பிறப்பதற்கு முன் தேவன் பின்வருமாறு வாக்குத்தத்தம் செய்தது உங்களுக்கு நினைவிருக்கலாம்:

> அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப் பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் (ஆதியாகமம் 25:23).

இந்த வாக்குத்தத்தம் இஸ்ரவேலர் வாக்குத்தத்த தேசத்தில் நன்றாக ஸ்திரப்பட்டு, தங்கள் ஆளுகையை - அதன் மூலம் தேவனுடைய ஆளுகையை – விரிவுபடுத்தி, ஏசாவின் சந்ததியினர் மீதும் ஆளுகை செய்வார்கள் என்பதைக் குறித்தது. மோசேயின் ஆதி வாசகர்கள் தங்கள் காலத்தில் ஏதோமியரைக் கையாண்டதால், இனிவரும் கிருபையைப் பற்றிய இந்த வாக்குத்தத்தம் குறிப்பாக அவர்களுக்குப் பொருந்தும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யாக்கோபின் வாழ்க்கைச் சரித்திரத்தில் தேவன் இனிவரும் கிருபையைப் பற்றிய எண்ணற்ற வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். உதாரணமாக, ஆதியாகமம் 28:10-22 இல் யாக்கோபின் பெத்தேல் சொப்பனத்தில், தேவன் தாம் யாக்கோபுக்கு இனி செய்யவிருந்த பல இரக்கங்களை உறுதியாக வெளிப்படுத்தினார். அதன் பின்னர், 35:11-12 இல் யாக்கோபு பெத்தேலில் தொழுது கொள்ளும்போது, அதே கிருபையின் வாக்குத்தத்தங்களை தேவன் மீண்டும் அவருக்கு உறுதிப்படுத்தினார். யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்ட இனிவரும் கிருபையைப் பற்றிய இந்த வாக்குத்தத்தங்கள், மோசேயின் வாசகர்கள் கானானை ஜெயித்து, அதில் குடியேறும்போது அவர்களுக்கு வரவிருந்த பிரகாசமான எதிர்காலத்தைத் தெரிவித்தன.

> யாக்கோபின் கதைகள் எவ்வாறு வாக்குத்தத்த தேசத்தின் மீது இஸ்ரவேலருக்கு இருந்த உரிமையை வலியுறுத்தின என்பதை விளங்கிக் கொள்ள, குறைந்தது இரு வேறு காரியங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒன்று, இந்தக் கதைகள் ஆபிரகாமுடைய வாக்குத்தத்தங்களுக்கு உரிமையுடைய வாரிசுகளாக போட்டியிட்டுக் கொண்டிருந்திருக்கக் கூடிய யாக்கோபு, ஏசா என்னும் இரு கூட்டத்தாருக்கு இடையேயான முரண்பாடுகளைப் பற்றியவை என்பதாகும். யாக்கோபு, ஏசா கதைகளும், அவற்றிற்கு இடையேயான முரண்பாடுகளும், ஏசா தெற்கு நோக்கி ஏதோமுக்குச் சென்றதையும், தேவன் அவர்களுக்கு அந்த தேசத்தைக் கொடுத்ததையும் – அதாவது, அங்குதான் தேவன் அவர்களை நிலைநிறுத்தினார் என்பதையும் – வாக்குத்தத்த தேசத்தைப் பற்றி ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு யாக்கோபே முறையான வாரிசு என்பதையும் தெரிவிக்கின்றன. இதனை யாக்கோபு லாபானை விட்டுப் பிரியும் கதையிலும் காணலாம். இவர்கள் யாக்கோபுக்கு அருகில் இருந்த வடதேசத்தைச் சேர்ந்த அவருடைய உறவினர்கள், ஆனால் அவர் அங்கு சில காலம் மட்டுமே தங்கியிருந்தார். ஆயினும், யாக்கோபு தன் தகப்பனையும், சகோதரனையும் வஞ்சித்து, வாக்குத்தத்த தேசத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றார் என்னும் உண்மை நிலையே யாக்கோபு/ஏசாவுக்கிடையேயான இந்த முரண்பாடுகளை விட மிக முக்கியமானது. 28 ஆம் அதிகாரத்தில், பெத்தேலில் யாக்கோபு பிரசித்தி பெற்ற அந்த சொப்பனத்தைக் காண்கிறார், அதில் தேவனும் தேவதூதரும் தோன்றுவதைக் கண்டு, யாக்கோபு, “நான் இந்த தேசத்திற்குத் திரும்பி வரப்போவதை நீர் தயவுசெய்து எனக்கு உறுதி செய்ய வேண்டும்?” என்று கேட்கிறார். தேவனும் அப்படியே தாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> செய்வதாக உறுதிபடக் கூறுகிறார். அதன் பின்னர், 35 ஆம் அதிகாரத்தில், தேவன், "நீ பெத்தேலுக்குச் சென்று, அங்கு ஒரு பலிபீடம் கட்டு. நான் உன்னைத் திரும்பவும் கொண்டு வருவேன் என்று சொன்ன அந்த இடத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டு" என்று சொல்லும் சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கலாம். நாமறிந்தபடி, பெத்தேல் வாக்குத்தத்த தேசமாக இருக்கிறது. யாக்கோபு எவ்வளவுதான் தவறியபோதும், எவ்வளவுதான் தன் தகப்பனையும், சகோதரனையும் ஏமாற்றியபோதும், லாபானின் தேசத்தில் கூட சந்தேகத்துக்குரிய காரியங்களைச் செய்தபோதும், யாக்கோபுடைய வாழ்க்கைச் சரித்திரத்தின் அவ்விரு பகுதிகளும் இதுவே தேவன் யாக்கோபுக்குக் கொடுத்த தேசம் என்பதை நேர்மறையான விதத்தில் வலியுறுத்துகின்றன. இவையனைத்தின் மத்தியிலும், யாக்கோபு தன் முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பட்ட தேசத்தை சுதந்தரிக்கும்படி தேவன் அவரைத் தெரிந்து கொண்டார்.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

இஸ்ரவேலுக்கு அருளப்பட்ட தேவகிருபையை அதன் ஆதி அர்த்தத்தை மனதில் கொண்டு பார்த்த நாம், யாக்கோபின் கதையை நவீன காலத்தில் பிரயோகிக்கும்போது தேவகிருபை அதில் எவ்விதங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று காண்போம்.

## நவீன காலப் பிரயோகம்

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம் நம்முடைய வாழ்வில் தேவகிருபையை பிரயோகிப்பதற்கு எண்ணற்ற வழிகள் உண்டு என்பது உண்மையே. ஆனால், நம் பாடத்திற்கு வசதியாக, அதனை கிறிஸ்துவின் ராஜ்யத்தின் துவக்கம், சபையின் சரித்திரம் முழுவதும் தொடரும் அவருடைய ராஜ்யம், மற்றும் அவர் மகிமையில் மீண்டும் வரும்போது நிகழும் அவரது ராஜ்யத்தின் நிறைவு ஆகியவற்றின் அடிப்படையில் யோசிப்போம். கிறிஸ்துவுடைய ராஜ்யத்தின் இம்மூன்று நிலைகளும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் தங்கள் வாழ்வில் கடந்தகால, தொடரும், மற்றும் இனிவரும் தேவகிருபையைக் கண்டுகொள்ள உதவும் முக்கியமான சில வழிகளைக் குறிக்கின்றன.

முதலாவதாக, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம் யாக்கோபின் வாழ்க்கையில் வெளிப்படும் கடந்தகால கிருபையைப் பார்க்கும்போது, தேவன் குறிப்பாக கிறிஸ்துவுக்குள்ளான தம் ராஜ்யத்தின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

துவக்கத்தில் நமக்கு அருளிய கடந்தகால கிருபையை எப்படி வெளிப்படுத்தினார் என்று நினைவுகூர வேண்டும். பழைய ஏற்பாடு முழுவதும் தொடரும் கிருபையின் நீண்ட சரித்திரத்தின் முடிவில் கிறிஸ்துவின் முதலாம் வருகை நிகழ்ந்தது. ரோமர் 5:20 போன்ற சில வேதப்பகுதிகள் குறிப்பிடுவது போல, கிறிஸ்துவின் முதலாம் வருகையில் தேவன் அதற்கு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகமாக கிருபையையும், இரக்கத்தையும் அருளினார். பவுல் அதனை இவ்வாறு சொல்கிறார்:

> பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று (ரோமர் 5:20).

இரண்டாவதாக, யாக்கோபின் வாழ்வில் தொடர்ந்து வந்த தேவகிருபை, கிறிஸ்துவின் ராஜ்யம் தொடர்ந்து செயல்படுகையில் நாம் தேவனுடைய தொடரும் கிருபையை நாடி, சார்ந்து கொள்ளும்படி நமக்கு நினைவுறுத்துகிறது. எபிரெயர் 4:16 போன்ற சில வேதப்பகுதிகள் சொல்வது போல, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் “தைரியமாய்க் [தேவனுடைய] கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.” அப்போது, “ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையைத் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்வோம்.”

மூன்றாவதாக, யாக்கோபுக்கு இனிவரும் கிருபையைப் பற்றி தேவன் அளித்த உறுதிப்பாடுகளைப் பார்க்கும்போது, கிறிஸ்துவின் ராஜ்யம் நிறைவாக வரும்போது நமக்குக் கிடைக்கவிருக்கும் தேவகிருபையை நாம் நினைவுகூர வேண்டும். வாக்குத்தத்த தேசத்தில் கிடைக்கவிருந்த இனிவரும் தேவகிருபையை மோசேயின் ஆதி வாசகர்கள் அறிந்து கொண்டது போல, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாம், புதிய சிருஷ்டிப்பில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதற்கு வாஞ்சிக்க வேண்டும். எபேசியர் 2:7 போன்ற வேதபகுதிகள், கிறிஸ்துவின் வருகையின்போது, நாம் “[தேவனுடைய] கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை” அனுபவிக்க இருக்கிறோம் என்பதை நினைவுறுத்துகின்றன.

## தேவன் மீது இஸ்ரவேலர் கொண்டிருக்க வேண்டிய பற்று

இஸ்ரவேல் மீதான தேவனுடைய கிருபையைப் பற்றிய முக்கிய கருப்பொருளைப் பார்த்த நாம் இனி, தேவன் மீது இஸ்ரவேலர் கொண்டிருக்க வேண்டிய பற்றுறுதியை பற்றிய இரண்டாம் முக்கிய கருப்பொருளைப் பார்ப்போம். முற்றிலும் தேவகிருபையால்தான் நித்திய இரட்சிப்பு அருளப்படுகிறது என்பதை பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. யாராலும் எப்போதும் தங்கள் கிரியைகளால் இரட்சிப்பை சம்பாதிக்க முடிந்ததில்லை. ஆனால், மனிதர்கள் தேவனுடைய இரட்சிக்கும் கிருபையைப் பெற்றுக் கொள்ளும்போது, தேவனுடைய ஆவி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களை மறுரூபப்படுத்தத் தொடங்குகிறார், அப்போது அவர்கள் தேவனுடைய பெரிய இரக்கங்களுக்கு மனப்பூர்வமாக நன்றி செலுத்தும் விதத்தில் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள். இது நமக்குள் வாசம் பண்ணும் தேவ ஆவியானவரின் கனியாகும். யாக்கோபின் வாழ்க்கையில் அவர் தேவன் மீது கொண்டிருந்த பற்றுறுதியைப் பார்க்கும்போது, இந்த அடிப்படை இறையியல் விபரங்களை மனதில் கொள்வது அவசியம்.

இதன் மூலம் நாம் அறிவதைக் காண, மோசே கூறிய ஆதி அர்த்தத்தின் அடிப்படையில் இஸ்ரவேலர் தேவன் மீது கொண்டிருக்க வேண்டிய பற்றுறுதியைப் பற்றி பார்த்து, பின்னர் அந்தக் கருத்தை நவீன காலத்திற்கு பிரயோகிப்பதைக் குறித்துக் காணவிருக்கிறோம்.

## ஆதி அர்த்தம்

பொதுவாக, மோசே தன் ஆதி வாசகர்கள் தங்கள் காலத்தில் தேவனிடம் பற்றுறுதியுடன் இருக்கும்படி அழைப்பு விடுப்பதற்காக தேவன் மீது யாக்கோபு கொண்டிருந்த பற்றுறுதியை வலியுறுத்தினார். மோசே இதைச் செய்த விதங்களில் ஒன்று, தேவன் எவ்வாறு யாக்கோபை பற்றுறுதி கொண்ட தம்முடைய ஊழியக்காரனாக மறுரூபப்படுத்தினார் என்பதை குறிப்பிட்டுச் சொன்னதாகும். யாக்கோபுடைய கதையின் ஆரம்பப் பிரிவுகளில், முற்பிதாவாகிய அவர் அதிகம் எதிர்மறையாகத்தான் சித்தரிக்கப்படுகிறார். யாக்கோபு பிறக்கும்போது தன் சகோதரனின் குதிங்காலைப் பிடித்துக் கொண்டிருந்ததால், முதல்பேறானவனின் ஸ்தானத்தைப் பறித்துக் கொள்ள முயற்சி செய்தார். அவருடைய சிறு வாலிப பருவத்தில், ஏசாவின் பசியைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவனுடைய சேஷ்டபுத்திரபாகத்தை பறித்துக் கொண்டார். அதோடு அவர் தன் வயதான தகப்பனையும் ஏமாற்றி ஏசாவுக்கென்று வைத்திருந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார். ஆரம்பத்தில் இருந்த யாக்கோபின் எதிர்மறையான பண்பு வெளிப்பாடுகளில் ஒரேயொரு விதிவிலக்கு மட்டும் உண்டு, அது, தேவன் தன்னைப் பாதுகாத்தால், கர்த்தரையே தன் தேவனாகக் கொள்வதாக யாக்கோபு பெத்தேலில் ஆணையிட்டுக் கொடுத்ததே ஆகும்.

இந்த ஆணைக்குப் பின்னர், யாக்கோபு லாபானிடம் சென்று அவருடன் வாழ்ந்தார். பெத்தேலில் யாக்கோபின் இருதயத்தில் விதைக்கப்பட்ட தேவன் மீதான பற்றுறுதியின் விதை தொடர்ந்து வளர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், யாக்கோபு தன் மாமனாரால் தவறாக நடத்தப்பட்டாலும், லாபானுடன் இருந்த நாட்கள் நிறைவேறி திரும்பி வந்தபோது, ஒரு புது மனிதனாக மாறியிருந்தார்.

இந்த மறுரூபத்தை மோசே குறைந்தது நான்கு வழிகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். முதலில், யாக்கோபு ஏசாவைக் குறித்து மனஸ்தாபப்பட்டார் என்று மோசே குறிப்பிடுகிறார். 32:4-5 இல், யாக்கோபு தன் ஊழியக்காரனிடம் தன் சார்பில் ஏசாவை “என் ஆண்டவன்” என்று அழைக்கச்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சொல்கிறார். இறுதியில், ஆதியாகமம் 33:8 இல் யாக்கோபு தானே சென்று ஏசாவை சந்தித்தபோது, நேரடியாக அவனை "என் ஆண்டவன்" என்று சொல்கிறார்.

இரண்டாவதாக, யாக்கோபு தேவனிடம் மனஸ்தாபப்படுகிறார். உதாரணமாக, ஆதியாகமம் 32:10 இல் யாக்கோபு தேவனிடம் பின்வருமாறு அறிக்கை செய்கிறார்:

> அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல (ஆதியாகமம் 32:10).

மூன்றாவதாக, யாக்கோபு தேவனிடமிருந்து ஒரு புதிய பெயரைப் பெற்றுக் கொள்கிறார். ஆதியாகமம் 32:22-32 இல், யாப்போக்கு ஆற்றங்கரையில் யாக்கோபு ஒரு தூதனுடன் போராடினார். 27-ஆம் வசனத்தில், யாக்கோபு அந்தத் தூதனிடம், தன் பெயர் யாக்கோபு என்று ஒப்புக்கொண்டு, தான் ஒரு "எத்தனாக" இருந்ததை அறிக்கையிடுகிறார். ஆனால், ஆதியாகமம் 32:28 இல் அந்த தூதன் யாக்கோபு அறிக்கை செய்ததற்கு இவ்வாறு பதில் சொல்கிறார்:

> உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார் (ஆதியாகமம் 32:28).

வேதாகமத்திலுள்ள பல பெயர்களைப் போல, *இஸ்ரவேல்* יִשְׂרָאֵל என்ற பெயரும் ஒரு காலத்தில் தேவனுக்கு துதி என்னும் அர்த்தத்தில் "தேவன் போராடுகிறார்" அல்லது "போர் செய்கிறார்" என்றிருந்தது. அது *சாரா* שָׂרָה என்னும் எபிரெய வினைச்சொல்லிலிருந்து எடுக்கப்பட்டது. அது 28 ஆம் வசனத்தில், "நீ போராடினாய்" என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பெயர் ஒரு சிறப்பான விதத்தில் யாக்கோபுக்குப் பொருந்துவதாக தூதன் விளக்கினார், ஏனென்றால் "அவர் தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டிருந்தார்." தேவனோடு யாக்கோபு போராடியது இந்தக் காட்சியில் ஒரு ஆசீர்வாதத்திற்காகப் போராடுவதைக் குறிக்கிறது. யாக்கோபு மனிதனோடு போராடியது அவர் ஏசாவுடனும் லாபானுடனும் போராடியதைக் குறிக்க அதிக வாய்ப்புண்டு. யாக்கோபின் வாழ்க்கையைப் பொறுத்தவரை, அவருடைய புதிய பெயர் அவர் புது மனிதனாக மாறியதையே குறித்தது. யாக்கோபு ஒரு எத்தனாகவே இருந்துவிடுவதற்கு பதிலாக, போராடி மேற்கொண்ட "இஸ்ரவேலாக" மாறினார்.

> யாக்கோபின் பெயரை தேவனே இஸ்ரவேல் என்று மாற்றிய சுவாரசியமான கதையை ஆதியாகம புத்தகத்தில் வாசிக்கிறோம். ஒரு தூதனுடன் போராடிய யாக்கோபு, அந்த தூதன் தேவனுடைய பிரதிநிதியாக இருந்ததைக் கண்டுகொள்கிறார்; அவர் தேவனுடைய தூதனானவராக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருந்தார். தேவன் தனக்கென ஒரு விசேஷித்த திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதையும் உணர்ந்தார். தேவன் அவர் மீது கவனம் செலுத்தி, அவரைச் சந்தித்து, அவருக்கென மிக மிக குறிப்பிடத்தக்கதொரு நோக்கத்தை வைத்திருந்தார். ... பண்டைய இஸ்ரவேலில், குழந்தைகள் பிறக்கும் வரை அவர்களுக்கு பெயர் சூட்டப்படுவதில்லை என்பது நாமறிந்ததே. அதாவது, முன்னதாகவே அவர்களுக்குப் பெயர் வைக்காதிருந்தார்கள். பிறக்கப் போவது ஆண்பிள்ளையாக இருந்தால், இந்தப் பெயரை வைப்போம் என்றோ, பிறக்கப் போவது பெண்பிள்ளையாக இருந்தால், இந்தப் பெயரை வைப்போம் என்றோ அவர்கள் சொல்வதில்லை. மாறாக, ஏதாவது ஒரு சைகை அல்லது அடையாளம் அல்லது குறிப்பு கிடைக்கும் வரை காத்திருந்தார்கள். இதேதான் யாக்கோபுக்கும் நடந்தது, அவர் பிறக்கும்போதே – கர்ப்பத்திலிருந்து வெளியே வரும்போதே – தன் சகோதரனாகிய ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக் கொண்டவனாக வந்தான். அதனால், அவனுக்கு எபிரெயத்தில் “யாக்கோவ்” என்ற பெயர் “குதிங்காலன்” அல்லது “குதிங்கால் பிடிப்பவன்” அல்லது “குதிங்கால்-வகை நபர்” என்னும் அர்த்தத்தில் வைக்கப்பட்டது. அதையே அவர் வாழ்நாள் முழுவதும் செய்து வந்தார்... ஆனால், தேவன் அவரைச் சந்தித்தபோது அவர் புதிய வாழ்க்கையைப் பெற்றுக் கொண்டார். தேவன் யாக்கோபைப் பிடித்தபோது, யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கு அல்லது தாத்தாவாகிய ஆபிரகாமை விட மேலாக நேரடியான வழியில் ஒரு தேசத்தின் தகப்பனாக இருப்பார் என்னும் அவருடைய மெய்யான நோக்கத்தை உணரச் செய்தார் – அது மிக நேரடியான ஒரு வழி... ஆகவே, யாக்கோபு என்னும் பெயர் இஸ்ரவேல் என்று மாறியது உண்மையில் ஒரு அழகான காரியம். தமக்கு ஊழியம் செய்யவும், பூமியில் தம்முடைய முதல் ஜனங்களை உருவாக்கும்படி பிள்ளைகளைப் பெற்றெடுக்கவும் யாக்கோபை இஸ்ரவேல் தேசத்தின் மெய்யான தகப்பனாக அழைத்ததில் தேவனுடைய பங்கு மிகவும் ஆச்சரியமானது.

– Dr. டக்லஸ் ஸ்டுவர்ட்

மோசேயின் ஆதி வாசகர்களுக்கு யாக்கோபின் புதிய பெயருடைய முக்கியத்துவத்தை மிகைப்படுத்திச் சொல்வது கடினமாக இருக்கும். “இஸ்ரவேல்” என்பது மோசே எகிப்திலிருந்து வாக்குத்தத்த தேசத்திற்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வழிநடத்திச் சென்ற பன்னிரண்டு கோத்திரங்களின் தேசியப் பெயராக இருந்தது. அவர்கள் தங்கள் முற்பிதாவின் புதிய பெயர் தேவனிடம் பற்றுறுதியுள்ள ஊழியக்காரன் என்று கேள்விப்பட்டபோது, இஸ்ரவேலராகிய தாங்களும் யாக்கோபைப் போலப் போராடி மேற்கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நினைவுபடுத்தப்பட்டார்கள்.

நான்காவதாக, யாக்கோபு லாபானுடன் தங்கியிருந்த காலத்திற்குப் பின்னர், அவர் பெத்தேலுக்குத் திரும்பியபோது, உண்மையாக தேவனைத் தொழுது கொண்டார் என்று அவரைப் பற்றி நேர்மறையாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. பெத்தேலில் அவர் தேவனிடம் பற்றுறுதியாக இருப்பதாக ஆதியாகமம் 28:20-21 இல் கொடுத்த வாக்குறுதியின்படி, ஆதியாகமம் 35:3 இல் பெத்தேலில் அவர் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தரை முழு உண்மையுடன் தொழுது கொண்டார்.

யாக்கோபின் மறுரூபம் பற்றிய மோசேயின் பதிவு அவருடைய ஆதி வாசகர்கள் மீது இரு முக்கிய தாக்கங்களை ஏற்படுத்தியது. அவரது வாசகர்கள் பல வழிகளில் தேவனிடம் பற்றுறுதி இல்லாமல் போகும் சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியதாக இருந்ததால், அவர் யாக்கோபின் பற்றுறுதியற்ற நிலையைப் பற்றி அவர்களுக்குச் சொல்லியிருந்தார். அதேசமயம், அவர் தன் வாசகர்கள் தங்கள் காலத்தில் யாக்கோபின் பற்றுறுதியை பின்பற்ற வேண்டும் என்று உற்சாகப்படுத்துவதற்காக, யாக்கோபின் மறுரூபத்தை தேவனிடம் பற்றுறுதி கொண்ட ஊழியக்காரன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். மோசேயின் ஆதி வாசகர்கள் தேவகிருபையைச் சார்ந்து கொள்ள வேண்டிய அதே நேரத்தில், வாக்குத்தத்த தேசத்தில் வாழ்க்கையின் சவால்களைச் சந்திக்கும்போது தேவனுக்குப் பற்றுறுதியுடன் ஊழியம் செய்வதற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவும் வேண்டியதாக இருந்தது.

மோசே ஆதியில் கொண்டிருந்த அர்த்தத்தில் இஸ்ரவேலர் தேவனிடம் கொண்டிருக்க வேண்டிய பற்றுறுதி என்னும் கருப்பொருளைப் பற்றிப் படித்த நாம், அதனை யாக்கோபின் வாழ்க்கையை நம் காலத்தில் பிரயோகிக்கும் அம்சமாகவும் பார்க்க வேண்டும். நம்முடைய பாட நோக்கங்களுக்காக, யாக்கோபுடைய வாழ்க்கையின் இந்தப் பரிமாணம், கிறிஸ்துவுடைய ராஜ்யத்தின் துவக்கம், தொடர்ச்சி, மற்றும் உச்சக்கட்டத்திற்கு எவ்வாறு பொருந்துகிறது என்பதை மீண்டும் ஒருமுறை பார்ப்போம்.

## நவீன காலப் பிரயோகம்

முதலாவதாக, எந்த நேரத்திலும் யாக்கோபின் வாழ்க்கைச் சரித்திரம் தேவனிடம் பற்றுறுதியுடன் இருக்க வேண்டிய நம் பொறுப்பை மனதில் கொள்ளும்படி நம்மை நடத்துகிறது, கிறிஸ்து தாமே தம் ராஜ்யத்தின் துவக்கத்தில் எல்லா நீதியையும் நிறைவேற்றினார் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். கிறிஸ்து நம்மைப் போல சோதிக்கப்பட்டும், பாவம் செய்யவில்லை என்று எபிரெயர் 4:15 கூறுகிறது. உண்மையில், கிறிஸ்து தம்மை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விசுவாசிக்கிற யாவருக்கும் பதிலாக தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் மனமுவந்து சிலுவை மரணத்தை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு தேவனுடைய கற்பனைகள் மீது பற்றுறுதியுடன் இருந்தார். அவருடைய பரிபூரண நீதி இப்போது விசுவாசத்தினால் நமக்குள் வந்துவிட்டது. கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் துவக்கத்தில் அவர் தேவனிடம் பற்றுறுதி கொண்டிருந்தது, யாக்கோபுடைய வாழ்க்கையை நம் வாழ்வில் பிரயோகிப்பதை – "இதைச் செய், அதைச் செய்யாதே" – என்னும் ஒழுக்கநெறியாகக் குறைக்காமல் இருக்க உதவுகிறது. யாக்கோபுடைய வாழ்க்கை ஏற்படுத்தும் ஒவ்வொரு ஒழுக்கநெறி தாக்கத்தையும் முதலில் கிறிஸ்து நம் சார்பில் நிறைவேற்றியதன் அடிப்படையிலேயே பார்க்க வேண்டும்.

இரண்டாவதாக, யாக்கோபின் கதையில் பற்றுறுதி என்னும் கருப்பொருளைப் பார்க்கும்போது, இன்று கிறிஸ்துவிடம் நாம் பற்றுறுதியுடன் ஊழியம் செய்வதற்கான வழிநடத்துதலைப் பெற்றுக் கொள்கிறோம். கிறிஸ்துவின் ராஜ்யம் தொடர்ந்து செயல்படும்போதும், தேவனிடத்தில் நாம் பற்றுறுதி கொண்டிருக்க வேண்டியதை கருத்தில் கொள்ளுமாறு யாக்கோபின் வாழ்க்கை அழைப்பு விடுக்கிறது. யாக்கோபு உட்பட நமக்கு முன்பாகச் சென்றிருப்பவர்களின் உண்மைத்தன்மையை பின்பற்றும்படி நம்மை உற்சாகப்படுத்தும் எபிரெயர் 12:1-2 போன்ற பல வேத பகுதிகள் நம் நினைவுக்கு வருகின்றன.

மூன்றாவதாக, யாக்கோபுடைய கதையின் ஒவ்வொரு அம்சமும் நம்முடைய இருதயங்களை தேவனுடைய ராஜ்யத்தின் உச்சக்கட்டத்தில் கிறிஸ்துவிடம் பற்றுறுதி கொண்டிருக்கும்படி திருப்ப வேண்டும். கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் ஒருநாளில் தேவனுடைய பரிபூரணமும், உண்மையுமுள்ள ஊழியக்காரர்களாக மறுரூபமடைவோம் என்பதை பற்றுறுதி என்னும் கருப்பொருள் நமக்கு நினைவுறுத்துகிறது. 1 யோவான் 3:2 போன்ற வேதப்பகுதிகள் போதிப்பது போல, கிறிஸ்துவின் வருகையில் நாம், "அவரைப் போல இருப்போம்."

> யாக்கோபு தேவனால் ஆசீர்வதிக்கப்படுவதாக வாக்குப்பண்ணப்பட்டதை பார்க்கும்போது, யாக்கோபின் கதைகளை நம் வாழ்க்கையில் இன்றும் பிரயோகிக்க முடியும். தேவன் யாக்கோபின் மீது அன்புகூர்ந்ததாக தம் வார்த்தையில் வாக்குப்பண்ணியிருந்தார் என்றாலும், தேவன் ஏற்கனவே வாக்குப்பண்ணியதை குறுக்கு வழிகளில் பெற்றுக் கொள்ள முயற்சி செய்வதில் யாக்கோபு தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை செலவிட்டார். ஆகவே, நாம் பெரும்பாலும் யாக்கோபைப் போலத்தான் இருக்கிறோம். தேவன் நமக்கு ஏற்கனவே வாக்குப்பண்ணியிருப்பதை, உண்மையில் கிறிஸ்துவுக்குள் ஏற்கனவே கொடுத்துவிட்டதை, எந்த வழியிலாவது பெற்றுக் கொள்ள



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாடுகிறோம். இதனை புதிய ஏற்பாட்டில் ரோமர் 8:32 விவரிப்பது போல வேறெந்த வசனமும் விவரிப்பதில்லை: "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" கிறிஸ்துவின் மூலம், "நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்" என்னும் சங்கீதம் 46-ன் வார்த்தைகளை நாம் சிறப்பாக அறியலாம். அதோடு கூட, அவர் நல்ல தேவன் என்றும், தம்முடைய உடன்படிக்கையின் பிள்ளைகளுக்கு தயவுடன் அருளப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் சேர்க்க விரும்புகிறேன்.

– Rev. மைக்கேல் ஜே. குளோட்டோ

இஸ்ரவேலின் மீதான தேவகிருபையையும், தேவன் மீதான இஸ்ரவேலின் பற்றுறுதியையும் பற்றிய முக்கிய கருப்பொருள்களைப் பார்த்த நாம், ஆதியாகமத்தின் இப்பகுதியில் உள்ள மூன்றாம் முக்கிய கருப்பொருளான இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதங்கள் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

# இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதம்

மோசே எழுதிய மற்ற கருப்பொருள்களை பார்த்தது போலவே இஸ்ரவேலின் மீதான தேவனுடைய ஆசீர்வாதம் என்பதைப் பற்றியும் ஆய்வு செய்யவிருக்கிறோம். முதலில், மோசே கொண்டிருந்த ஆதி அர்த்தத்தையும், பின்னர் இக்கருப்பொருளை நாம் நவீன காலத்தில் பிரயோகிப்பதையும் பற்றிப் பார்ப்போம். மோசேயின் ஆதி அர்த்தத்தை முதலில் பார்க்கத் தொடங்குவோம்.

## ஆதி அர்த்தம்

பொதுவாக, தம் ஜனங்களுடனான தேவனுடைய உடன்படிக்கை உறவில், கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதங்களும், கீழ்ப்படியாமைக்கு சாபங்களும் உண்டு. யாக்கோபு தன் கீழ்ப்படியாமையினால் எதிர்மறையான விளைவுகளை சந்திக்க நேர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக, தன் சகோதரனையும், தகப்பனையும் ஏமாற்றிய பிறகு யாக்கோபு தன் ஜீவன் தப்ப ஓடிப் போனார். அதோடு, தன் மாமனாராகிய லாபானுடனும் கடினமான நேரங்களை அனுபவிக்க நேரிட்டது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனால், தேவன் தங்களுக்கு அநேக ஆசீர்வாதங்களையும் அருளிச் செய்திருக்கிறார் என்பதை மோசே தம் ஆதி வாசகர்களுக்கு நினைவுறுத்த, தேவன் யாக்கோபுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை அதிகமாக வலியுறுத்துகிறார். யாக்கோபின் வாழ்க்கையில் இருந்த தேவனுடைய ஆசீர்வாதங்களை இரு வகையாகப் பிரிக்கலாம்: அவை, யாக்கோபு கீழ்ப்படியாமல் போனாலும் கிடைத்த ஆசீர்வாதங்கள் மற்றும் கீழ்ப்படிதலினிமித்தம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் ஆகும்.

ஒருபுறம், யாக்கோபிற்கு தேவப்பற்று இல்லாதிருந்தபோதிலும் ஆசீர்வாதங்களைப் பெற்றார். உதாரணமாக, ஆதியாகமம் 27: 27-29 இல், யாக்கோபு ஈசாக்கை ஏமாற்றி தேவனின் ஆசீர்வாதத்தைப் பெற்றார். யாக்கோபு 28:13-15 இல் ஏசாவிடருந்து உயிருக்குத் தப்பி ஒடிய போதிலும் பெத்தேலில் தேவனின் ஆசீர்வாதங்களைப் பெற்றார்.

மறுபுறம், யாக்கோபின் கதையின் பிற்காலத்தில், தேவனின் ஆசீர்வாதம் யாக்கோபு தேவப்பற்றுடன் இருந்ததால் கிடைத்தது. உதாரணமாக, ஆதியாகமம் 29:1–31:55 இல், தேவன் லாபான் மூலம் குடும்பம் மற்றும் செல்வத்தின் ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கு வழங்கினார். யாக்கோபு தன்னைத் தாழ்த்திக் கொண்ட பிறகு, ஆதியாகமம் 32:1–33:17 இல் தேவன் அவருக்கு ஏசாவின் மூலம் ஆசீர்வாதங்களை வழங்கினார். இதேபோல், ஆதியாகமம் 33:18–34:31 இல், யாக்கோபு தனது குமாரர்கள் கானானியர்களுடன் மோதலில் ஈடுபட்ட பிறகு சீகேமில் தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றார். தேவனை ஆராதிப்பதற்கு தன்னை அர்ப்பணித்த போது தேவன் 35:9-13 இல் பெத்தேலில் யாக்கோபுக்கு ஆசீர்வாதம் கொடுத்தார்.

வாக்குதததத்தம் பண்ணப்பட்ட நிலத்தை நோக்கி அவரைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியேறும்போதும் தேசத்தை சுதந்தரிக்கும்போதும் பல சவால்களை எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதை மோசே அறிந்திருந்தார். இஸ்ரவேலர்கள் நன்றியுடையவர்களாக இருப்பதற்கும் தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதற்கு ஜனங்கள் தொடர்ந்து செல்வதற்கும் இந்த பகுதியிலும் மற்ற சில வேத பகுதிகளிலும் யாக்கோபு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதைப் பற்றி மோசே பேசினார். இஸ்ரவேலின் மீதான தேவ ஆசீர்வாதத்தின் கருப்பொருளில் உண்மையான அர்த்தத்தைப் பார்த்தவுடன், நவீன பயன்பாட்டிற்கான இந்த விஷயங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது கடினம் அல்ல.

## நவீன காலப் பிரயோகம்

நம்முடைய முந்தைய விவாதங்களுக்கு ஏற்ப, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் முழுநிறைவு ஆகியவற்றின் அடிப்படையில் நாம் மீண்டும் ஒருமுறை பேசுவோம். ராஜ்யத்தின் துவக்கத்தில் நாம் முதலில் கிறிஸ்துவை நோக்கி நம் இருதயத்தை திருப்ப வேண்டும். யாக்கோபை போலல்லாமல், தேவப்பற்றின்மை காரணமாக இயேசு எந்த ஆசீர்வாதத்தையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பெறவில்லை; காரணம் அவரிடம் பாவம் இல்லை. ஆனால் அவர் பிதாவுக்கு உண்மையுள்ளவராக இருந்ததால், இயேசு பூமியில் வாழ்ந்த காலத்தில் பெரும் ஆசீர்வாதங்களையும், அவர் பரலோகத்திற்கு ஏறியபோது அதிக ஆசீர்வாதங்களையும் பெற்றார். இயேசுவின் ஆசீர்வாதங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், எபேசியர் 1:3 போன்ற பகுதிகள் கற்பிப்பது போல, கிறிஸ்துவுடனான நமது ஐக்கியத்தின் மூலம், இயேசு பெற்ற ஆசீர்வாதங்களில் நாமும் பங்கு கொள்கிறோம் என்பதாகும்.

இது தவிர, கிறிஸ்து தனது ராஜ்யத்தின் தொடர்ச்சி முழுவதும் தனது ஜனங்களின் மீது ஆசீர்வாதங்களை ஊற்றுகிறார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. அவர் யாக்கோபுடன் செய்தது போலவே, தேவன் சில சமயங்களில் நாம் தேவப்பற்று இல்லாமலிருக்கும்போதும், மற்ற சமயங்களில் நம் தேவப்பற்றிற்கு பதிலளிக்கும் விதத்திலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். இப்போது, வாழ்க்கையானது கிறிஸ்துவின் சீஷர்களுக்கு சுய மறுப்பு மற்றும் துன்பம் நிறைந்ததாக உள்ளது. ஆனால் தேவன் நம் ஒவ்வொருவரையும் அவருடைய பரிசுத்த ஆவியின் அற்புத ஆசீர்வாதத்தால் முத்திரையிடுவதாக உறுதியளித்துள்ளார் என்பதை 2 கொரிந்தியர் 1:21-22 மற்றும் எபேசியர் 1:13-14 போன்ற வேத பகுதிகள் தெளிவுபடுத்துகின்றன. வரவிருக்கும் உலகில் இன்னும் பெரிய நம்முடைய சுதந்தரத்திற்கான உத்தரவாதமாக பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளும் நம்மிடையேயும் வாழ்கிறார்.

எனவே, ஆதியாகமம் புத்தகத்தில் யாக்கோபுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களைப் பார்க்கும்போதெல்லாம், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நிறைவில் நாம் அளவிட முடியாத ஆசீர்வாதங்களைப் பெறுவோம் என்று நினைவூட்டப்படுகிறோம். மத்தேயு 25:34 போன்ற பகுதிகள் தெளிவாகக் கற்பிப்பது போல, கிறிஸ்து திரும்பி வரும்போது, தேவன் நம்மை "உலகம் சிருஷ்டிக்கப்பட்டதிலிருந்து நமக்காகத் தயார் செய்யப்பட்ட ராஜ்யத்திற்கு" வரவேற்பார்.

இஸ்ரவேல் மீதான தேவனின் கிருபை, இஸ்ரவேலின் தேவப்பற்று மற்றும் இஸ்ரவேலை தேவன் ஆசீர்வதித்தல் போன்ற முக்கிய கருப்பொருள்களைப் பார்த்த பிறகு, யாக்கோபின் வாழ்க்கையைக் குறித்த மோசேயின் பதிவில் நான்காவது மற்றும் மிக முக்கியமான கருப்பொருளான இஸ்ரவேல் *மூலமாக* தேவனின் ஆசீர்வாதம் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

## இஸ்ரவேல் மூலமாக தேவனின் ஆசீர்வாதம்.

முன்பு போலவே, மோசேயின் அசல் அர்த்தத்தின் அடிப்படையில் இஸ்ரவேல் மூலம் தேவன் பிறரை ஆசீர்வதித்ததின் கருப்பொருளை ஆராய்வோம், பின்னர் கருப்பொருளின் நவீன பயன்பாட்டைப் பார்ப்போம். முதலில் மோசே ஆதியில் அர்த்தப்படுத்தியது என்னவென்று பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## ஆதி அர்த்தம்

அசல் வாசகர்களுக்கான இந்த கருப்பொருளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, இஸ்ரவேலின் தந்தை என்ற முறையில் ஆபிரகாமுக்கு தேவன் தந்த சிறப்பு நியமனத்தை நாம் நினைவுபடுத்த வேண்டும். மனிதகுலத்தின் உண்மையான கட்டளையை நிறைவேற்றுவதில் இஸ்ரவேல் ஜனங்கள் முன்னிலை வகிக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டார் என்பதை ஆதியாகமத்திலுள்ள ஆபிரகாமின் கதை விளக்குகிறது. அவர்கள் பெருகி தேவனின் உண்மையான சாயல்களால் பூமியை நிரப்பியிருக்க வேண்டும். தேவனின் ஆசீர்வாதத்தை பூமி முழுவதும் மற்ற மக்களுக்கு பரப்புவதே இதைச் செய்வதற்கான ஒரே வழியாகும். ஆதியாகமம் 12:2-3 இல் நாம் வாசிப்பது போல, தேவன் இவ்வாறு ஆபிரகாமிடம் கூறினார்:

> நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதியாகமம் 12:2-3).

தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தை "பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும்" பரப்ப ஆபிரகாமுக்கு தேவன் அழைப்பு விடுத்ததை இங்கே கவனிக்கவும். ஆனால் தேவனுடைய ஆசீர்வாதம் பூமி முழுவதும் பரவியிருந்தாலும், எல்லா நபர்களும் ஆசீர்வதிக்கப்படுவதில்லை என்பதை கவனிக்கவும். தேவன் சொன்னார்: "உன்னை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்." வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சிலர் இஸ்ரவேலின் முயற்சிகளை நிராகரிப்பார்கள், மற்றவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்வார்கள். அதன்படி மற்ற மக்களை ஆசீர்வதிப்பதாகவும் சபிப்பதாகவும் தேவன் உறுதியளித்தார்.

தேவன் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்திய ஆசீர்வாதம் மற்றும் சாபத்தின் அதே இரட்டை செயல்முறை ஆதியாகமம் 27:29 இல் ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தபோது நிகழ்வதைக் காணலாம், அப்போது ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தபோது இவ்வாறு சொன்னார்:

> உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய் இருப்பார்கள் (ஆதியாகமம் 27:29).

யாக்கோபு தன் வாழ்க்கையின் பெரும்பகுதியை தனது காலத்தில் பல்வேறு மக்களுடன் எவ்வாறு தொடர்பு கொண்டார் என்பதைப் பற்றிய பதிவை மோசே சுட்டிக்காட்டுவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டார். மோசேயின் காலத்தில் இஸ்ரவேலர்களுடன் தொடர்பு கொண்ட மக்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

குழுக்களின் மூதாதையர்கள் இவர்கள். எனவே, இந்த வழியில், மோசே இஸ்ரவேலுக்கு இந்த அல்லது அந்த குழுவை எப்படி நடத்த வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார். அவர்கள் யுத்தத்திற்கு செல்ல வேண்டுமா? அல்லது அவர்கள் அமைதியை நிலைநாட்ட வேண்டுமா?

உதாரணமாக, யாக்கோபின் கதைகள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நிலத்தின் எல்லைக்குள் இரண்டு மக்கள் குழுக்களை கையாள்கின்றன.

ஒருபுறம், ஆறாவது பிரிவு 33:18–35:15 இல் யாக்கோபு மற்றும் கானானியர்களிடையே நடந்த யுத்தங்களைப் பற்றி குறிப்பிடுகிறது. ஆதியாகமம் 15:16 இல், "எமோரியர்களின் அக்கிரமம் நிறைவாகும் வரை" (இது கானானியர்களைக் குறிப்பதற்கான மற்றொரு சொல் ஆகும்) இஸ்ரவேலை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வரமாட்டேன் என்று தேவன் தெளிவாக சொன்னார். ராகாப் போன்ற சிலரைத் தவிர, கானானியர்கள் மோசேயின் நாட்களில் வாக்குத்தத்த நிலத்தை அசுத்தப்படுத்தினர், அதனால் அவர்களை அழிக்கும்படி இஸ்ரவேலை தேவன் கட்டளையிட்டார். எனவே சீகேமியர்களை யாக்கோபு தோற்கடித்ததையும், மற்ற கானானியர்களிடமிருந்து யாக்கோபை தேவன் பாதுகாத்ததையும் மோசே அறிவித்ததில் ஆச்சரியமில்லை.

மறுபுறம், யாக்கோபின் வாழ்க்கையின் இரண்டாவது பிரிவு 26:1-33 இல் ஈசாக்கு மற்றும் பெலிஸ்தியர்களுக்கிடையே நடந்த யுத்தங்களைப் பற்றி கூறுகிறது. கானானியர்களுக்கும் யாக்கோபிற்கும் இடையே இருந்த மோதலைப் போலல்லாமல், இந்த பிரிவு பெலிஸ்தியர்களுடனான ஈசாக்கின் சமாதானத்தைப் பற்றி கூறுகிறது. யோசுவா 13:1-5 லிருந்து தேவன் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் அளித்த தேசங்களில் பெலிஸ்தியர்கள் வாழ்ந்ததை நாம் அறிகிறோம். ஆனால் பெலிஸ்தியர்கள் என்கிற அவர்களின் பெயர் கேப்டோரிலிருந்து வந்த கடற்பகுதி மக்கள் என்பதைக் குறிக்கிறது. இந்த காரணத்திற்காக, அவர்கள் கானானியர்களுக்கு எதிரான தேவனின் நியாயத்தீர்ப்பின் கீழ் வரவில்லை. இந்த கொள்கையானது ஆதியாகமம் 21:22-34 இல் ஆபிரகாமின் எடுத்துக்காட்டுகளாலும் 26:26-33 இல் ஈசாக்கின் எடுத்துக்காட்டுகளாலும் ஆதரிக்கப்பட்டது. இந்த இரண்டு முற்பிதாக்களும் பெலிஸ்தியர்களுடன் சமாதான ஒப்பந்தங்களை செய்து கொண்டனர். இதன் விளைவாக, மோசேயின் காலத்தில் இஸ்ரவேலர்கள் ஆபிரகாம் மற்றும் ஈசாக்கு ஆகியோரைப் பின்பற்றி சமாதானமாக பெலிஸ்தியர்களுடன் வாழ முயன்றனர். பெலிஸ்தியர்களின் பிற்கால தலைமுறையினர் இந்த அமைதியை உடைத்த பிறகுதான் இஸ்ரவேல் அவர்களுக்கு எதிராக போர் தொடுத்தது.

இந்த எடுத்துக்காட்டுகளுக்கு அப்பால், வாக்குத்தத்த நிலத்திற்கு வெளியே வாழ்ந்த மக்களைப் பற்றியும் யாக்கோபின் கதை பேசுகிறது. உதாரணமாக, 29:1–31:55 இல் லாபானுடன் யாக்கோபு இருந்த காலத்தின் மையப் பிரிவு வாக்குத்தத்த நிலத்திற்கு வடக்கே உள்ள பதான் அராமில் வாழ்ந்த இஸ்ரவேலர்களின் தொலைதூர உறவினர்கள் மீது கவனம் செலுத்துகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

லாபான் மற்றும் அவனுடைய குடும்பத்தாரின் வஞ்சகத்திற்கு எதிராக யாக்கோபு அங்கே இருந்த காலத்தைப் பற்றிய பதிவு எச்சரிக்கிறது. ஆனால் ஆதியாகமம் 31:51-55 யாக்கோபும் லாபனும் தங்களுக்கு இடையேயான புவியியல் எல்லையை மதிக்கவும், ஒருவருக்கொருவர் சமாதானமாக வாழவும் சத்தியம் செய்தார்கள் என்பதைக் குறிக்கிறது. மோசேயைப் பின்பற்றிய இஸ்ரவேலர்கள் வடக்கு எல்லையில் தங்கள் உறவினர்களுடன் சமாதானமாக வாழ வேண்டும் என்பதை இது தெளிவுபடுத்தியது. பின்னர் தான் இஸ்ரவேல் தேவனுடைய ராஜ்யத்தை இந்த இடத்திற்கும் பரப்ப இருந்தது.

வாக்குத்தத்த நிலம் மற்றும் வடக்கு எல்லையில் வாழ்ந்த மக்களைப் பற்றி பேசியதோடு மட்டுமல்லாமல், யாக்கோபின் வாழ்க்கை கதையின் பெரும்பகுதி அவரது சகோதரர் ஏசாவுடனான அவரது தொடர்புகளில் கவனம் செலுத்துகிறது. நாம் குறிப்பிட்டுள்ளபடி, ஆதியாகமம் 25:19-34 இல் சகோதரர்கள் மற்றும் தேசங்களுக்கிடையேயான போராட்டத்தின் ஆரம்பம், வாக்குத்தத்த நிலத்தின் தெற்கு எல்லையான சேயீரில் வாழ்ந்த ஏதோமியர்களுடனான இஸ்ரவேலின் தொடர்புகளை முன்னறிவித்தது என்ற உண்மையை யாக்கோபு மற்றும் ஏசாவின் தொடர்புகள் முன்னிலைப்படுத்தின.

ஆதியாகமத்தின் அசல் பார்வையாளர்களுக்கு ஏதோம் குறிப்பாக முக்கியமானது, ஏனென்றால் அவர்கள் வாக்குத்தத்த நிலத்தின் தெற்கு எல்லையில் போகும் போது ஏதோமியர்களின் விரோதத்தை எதிர்கொண்டனர். இந்த பிராந்தியத்தில் மற்ற மக்களுடன் யுத்தம் செய்ய இஸ்ரவேலர்களுக்கு தேவன் கட்டளையிட்டார், ஆனால் உபாகமம் 2:4-6 மற்றும் எண்ணாகமம் 20:14-21 இல், மோசே குறிப்பாக இஸ்ரவேலை தாழ்மையுடனும், அவர்களது உறவினர்களான ஏதோமியர்களுடனும் சமாதானமாகவும் வாழும்படி கட்டளையிட்டார்.

யாக்கோபு வஞ்சகத்தின் மூலம் தேவனின் ஆசீர்வாதத்தைப் பெற்றார் என்பதை யாக்கோபின் கதை இஸ்ரவேலர்களுக்கு நினைவுபடுத்தியது. யாக்கோபு தன்னை ஏசாவிடம் தாழ்த்தினார் என்பதையும் அது சுட்டிக்காட்டியது. இதை விட, யாக்கோபு பற்றிய கதைகள் யாக்கோபு, ஏசா மற்றும் அவர்களின் சந்ததியினரின் அமைதியான, புவியியல் பிரிவை மையமாகக் கொண்டிருந்தன. மோசேயின் தகவல்களின் இந்த பரிமாணங்கள் அவரைப் பின்பற்றும் இஸ்ரவேலர்கள் ஏதோமியர்களை நடத்தும் வழிகளைப் பற்றி நேரடியாகப் பேசின. கொஞ்ச காலத்திற்கு பிறகே, ஏதோமியர்கள் இஸ்ரவேலை தொந்தரவு செய்தபோது, இஸ்ரவேல் அவர்களுடன் யுத்தத்திற்குச் சென்றது.

இப்போது நாம் இஸ்ரவேல் மூலம் தேவன் மற்றவர்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தின் உண்மையான அர்த்தத்தைப பற்றி பேசியிருக்கிறோம், இந்த கருப்பொருளின் நவீன பயன்பாட்டிற்கு நாம் இப்பொழுது திரும்ப வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## நவீன காலப் பிரயோகம்

இந்த கருப்பொருள் நம் வாழ்வில் பல தாக்கங்களைக் கொண்டுள்ளது, ஆனால் வசதிக்காக நாம் மீண்டும் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் மூன்று கட்டங்களில் கவனம் செலுத்துவோம். முதலில், அவருடைய ராஜ்யத்தின் தொடக்கத்தில், இஸ்ரவேலின் ராஜாவான இயேசு, பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களை வழங்க வந்தார். யோவான் 12:47-48 போன்ற வேத பகுதிகள், இயேசு தனது முதல் வருகையில், சாத்தானையும் அவனது பிசாசுகளையும் தோற்கடிக்க வந்தார் என்று கூறுகின்றன. ஆனால் அவர் பூமியில் உள்ள ஒவ்வொரு தேசத்திற்குமான சமாதான விதிமுறைகளுடன் வந்தார். இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் எதிர்ப்பை எதிர்கொண்டனர், ஆனால் அவர்கள் பொறுமையாக சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் தேவனுடனான ஒப்புரவாதலைக் குறித்துப் பேசினர். சுவிசேஷத்தை நிராகரித்தவர்களுக்கு எதிராக கடைசி நாளில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்பது பற்றியும் அவர்கள் எச்சரித்தனர்.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது, சபை ஊழியத்தின் மூலம் தேவனுடைய ஆசீர்வாதம் தேசங்களுக்குள் பரவி வருகிறது. கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, தேசங்களை தொடர்ந்து ஏமாற்றும் பொல்லாத ஆவிகளுக்கு எதிராக நாம் செல்கிறோம். 2 கொரிந்தியர் 5:20 போன்ற பகுதிகள் சொல்வது போல், நாம் "கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக" இருக்கிறோம். கடைசி நாளில் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி நாம் எச்சரித்தாலும், தேவனுடனான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் விதிமுறைகளை நாம் முழு உலகிற்கும் வழங்குகிறோம்.

மூன்றாவதாக, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நிறைவை நோக்கமாகக் கொண்டு யாக்கோபு மற்றவர்களுடன் கொண்டிருந்த தொடர்பின் பயன்பாட்டைக் கொண்டுவர வேண்டும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தேவன் நியாயத்தீர்ப்பை வழங்குவதற்கான நேரம் என்று தீர்மானித்தபோது இஸ்ரவேல் மற்றவர்களுக்கு சமாதானம் அளித்தல் திரும்பப் பெறப்பட்டது. இதேபோல், கிறிஸ்து மகிமையில் திரும்பும்போது, கிறிஸ்து மற்றும் அவருடைய ராஜ்யத்தை எதிர்த்த அனைவரிடமிருந்தும் தேசங்களுக்கான சமாதான சலுகை முற்றிலும் திரும்பப் பெறப்படும். அந்த நேரத்தில், பொல்லாதவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் வருவார்கள், ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 5:9-10 போன்ற பகுதிகள் நமக்குச் சொல்வது போல், பூமியின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் கிறிஸ்துவை நம்பிய எண்ணற்ற மக்கள் உலகளாவிய தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முடிவுரை

இந்த பாடத்தில், ஆதியாகமம் புத்தகத்தில் முற்பிதாவான யாக்கோபின் வாழ்க்கையைப் பற்றிய மோசேயின் விளக்கத்தை நாம் ஆராய்ந்தோம். மோசே தனது பதிவின் கட்டமைப்பையும் உள்ளடக்கத்தையும் எவ்வாறு திறமையாக ஒருங்கிணைத்தார் என்பதை நாம் பார்த்தோம், இதனால் யாக்கோபின் வாழ்க்கை வாக்குதததத்தம் பண்ணப்பட்ட நிலத்தை நோக்கி அவரைத் தொடர்ந்து வந்த இஸ்ரவேலர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்ரவேலின் மீது தேவன் காட்டிய கிருபை, தேவன் மீதான இஸ்ரவேலரின் தேவப்பற்று, இஸ்ரவேலின் மீதான தேவனின் ஆசீர்வாதம் மற்றும் இஸ்ரவேலின் மூலம் தேவனின் ஆசீர்வாதம் போன்ற மோசேயின் முக்கிய கருப்பொருள்கள் மோசேயின் நாளில் இஸ்ரவேல் தேசத்திற்கு நடைமுறை வழிகாட்டுதலை வழங்கியது மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் சீஷர்கள் நம்முடைய நாளில் தொடர்ந்து தேவனுக்கு சேவை செய்ய முற்படுவதற்கும் வழிகாட்டுகிறது.

யாக்கோபின் கதை கிறிஸ்துவை நம்பும் அனைவருக்கும் நம்பிக்கையை கொடுக்கிற அற்புதமான கதையாகும். மோசேயின் ஆதி வாசகர்கள் தோல்விகள் மற்றும் வெற்றிகளைக் கையாண்டபோது அது அவர்களுக்கு முதலில் உதவியது. வாக்குத்தத்த நிலத்தை நோக்கி நகரும் போது மற்ற மக்களுடனான அவர்களின் தொடர்புகளை அது வழிநடத்தியது. அது இன்று உங்களுக்கும் எனக்கும் அதே போன்ற காரியத்தைச் செய்கிறது. யாரும் தேவனின் இரக்கத்திற்கு தூரமானவர்கள் அல்ல என்று யாக்கோபின் கதையிலிருந்து நமக்கு உறுதி கிடைக்கிறது. கிறிஸ்துவுடன் இணைந்திருப்பவர்களாகிய நமக்கு பல தோல்விகள் இருந்தபோதிலும், கிறிஸ்து மகிமையில் திரும்பும் வரை தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை உலகம் முழுவதும் நீட்டிப்பது எப்படி என்பதை நாம் யாக்கோபிலிருந்து கற்றுக்கொள்ளலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.